பக்கங்கள்:08

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 06 புதன்கிழமை 19.04.2023 கதிர்160

புதுக்குடியிருப்பில் இருந்து கொழும்பு சென்ற

## பயணிகள் பேருந்து டிப்பருடன் நேருக்குநேர் மோதி விபத்து

### தம்புள்ளையில் ஒருவர் உயிரிழப்பு; 10 பேர் படுகாயம்

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புப் பகுதியில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக் குள்ளாகியுள்ளது.

தம்புள்ளைக்கு அருகில் நேற்றிரவு 11.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் டிப்பர் வாகனசாரதிசம்பவஇடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

விபத்தில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸின் சாரதி உள்ளிட்ட 10 பேர் படுகாயமடைந்த நிலை யில் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

பஸ்ஸில் பயணித்தவர்களில் பெரும்பாலானோர் புதுக் குடியிருப்பு, கிளிநொச்சி ☞2



## தேசிய அரசு அமைப்பதென்பது அமைச்சரவை விரிவாக்கம்தான்

முன்னிலை சோசலிசக் கட்சி விளாசல்

தேசிய அரசு என்ற பேச்சானது அமைச்சரவை விரிவுபடுத்தல் நோக்கத்தினையே அடிப்படையாகக் கொண்டதுஎன்றுமுன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுதுஜயகொட தெரிவித்தார்.

நுகேகொடவில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித் ததாவது:

தேசிய அரசு என்ற விடயம் நாட்டினை மையப்படுத்தியதாக இல்லை. ஆகவே அது அமைச்சரவையை விரிவுபடுத்துவதை நோக்காகக் கொண்டதாகும். அந்த வகையில் தேசிய அரசில் தற்போதைய எதிர்க்கட்சியில் மூளையுடைய எவரும் இணைவார்கள் என்று ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

எல்லாத் தமிழர்களுக்கும் தலையே போனாலும் தமிழ் அரசியல் கட்சிகள் எல்லாம் ஒற்றுமையாக ஓரணியில் நிற்கும் என்று எதிர்பார்க்க முடியாது என்பதற்கு உதாரணமாக ஒரு சம்பவம் அண்மையில் வவுனியாவில் நடந்துள்ளது.

வடக்கு கிழக்கில் நடக்கும் பௌத்த சிங்கள பேரினவாத ஆக்கிரமிப்புக்களை எதிர்த்துப் போராட்டம் நடத்துவது என்று யாழ்ப்பாணத்தில் கூடிய 5 கட்சிகளின் தலைவர்கள்மற்றும்பொதுஅமைப்புக்களின் முடிவுப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் அது பற்றி ஆராய்வதற்காகக் கூட்டம் கூட்டப்படவேண்டியிருந்தது. வவுனியாவில் மட்டுமே அத்தகைய கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்டப் பிரதிநிதியும் கலந்து கொண்டிருந்தார். பரவாயில்லையே ☞2

## தேசிய அரசமைக்க ராஜித மீண்டும் அழைப்பு

தேசிய அரசமைப்பது தொடர்பான யோசனையை அரசு முன்வைக்கும் பட்சத்தில், அதற்கு அனைத்துக் கட்சிகளும் இணக்கம் தெரிவிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள்



சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

'தேசிய அரசு தொடர்பான யோசனையை 2007 ஆம் ஆண்டு நான் முன்வைத்தபோது அதனை ஐக்கிய தேசியக் கட்சி ☞2

## அத்தியாவசிய சேவைகளுக்கு வர்த்தமானி அறிவித்தல்

மின்சார விநியோகம், பெற்றோலியஉற்பத்திமற்றும் எரிபொருள்வழங்கல்மற்றும் விநியோகம், தபால் சேவை மற்றும்சுகாதாரசேவைகளை அத்தியாவசியசேவைகளாகப் பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி வெளியிடப் பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலாளரினால்செவ்வாய்க்கிழமை இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டது.

அதற்கிணங்கமின்சாரம் வழங்கல் தொடர்பான சகல சேவைகள், பெட்ரோலிய உற்பத்திகள் மற்றும் எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம், தபால் சேவை, வைத்தியசாலைகள், மருந்தகங்கள்மற்றும்அதுபோன்ற ஏனைய நிறுவனங்களில் நோயாளர்களின் பராமரிப்பு மற்றும் சிகிச்சை வழங்கல் தொடர்பில் வழங்கப் படவேண்டிய அல்லது தேவைப்படும் சகல ☞2

# ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியேயல்ல

## வாசுதேவ நாணயக்கார கடும் விமர்சனம்

**ஐக்கிய மக்கள் சக்தி பிரதான எதிர்க் கட்சி என்ற வகிபாகத்தை கொள்ளமுடியாது என்று ஜனநாயக இடதுசாரிகள் முன்னணியின்தலைவரும்நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக் கார தெரிவித்தார்.**

**கொழும்பில் அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:**

**ஐக்கிய மக்கள் சக்தியை எதிர்க்கட்சியாக கொள்ளமுடியாது. அந்தக் கட்சிக்கும், ஆட்சியாளர்களுக்கும் இடையில் எவ்விதமான கொள்கை வேறுபாடுகளும் இல்லை.**

**ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையிலான கொள்கைகள் சமமானவையே. அவ்வாறு இருக்கும்போது எந்த அடிப்படையில் அக்கட்சியை எதிர்க்கட்சியாகக் கொள்ளமுடியும்?**

**அத்துடன், அக்கட்சி தேசிய ஆட்சியை அமைப்பதற்கு முயற்சிப்பதாகக் கூறப்படுகின்றது. இந்த முயற்சியானது எதிர்க்கட்சி அற்ற நிலைமையொன்றை உருவாக்குவதாகும்.** ☞2

## அமைச்சரவை அனுமதி வழங்கியது

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையைநடைமுறைப்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப்பெற அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணர்வத்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரவித்ததாவது: ☞2

தேசிய அரசு என்பது

## நெருக்கடிகளுக்குள் எல்லோரையும் இழுத்து பங்காளிகளாக்கும் முயற்சி

### சாடுகிறார் சரித்த ஹேரத் எம்.பி

தேசிய அரசு என்பது அடுத்து வரவுள்ள நெருக்கடிகளுக்கு அனைவரையும் பங்காளிகளாக்கி முத்திரை பதிக்கச் செய்வதற்கான முயற்சியாகும் என்று சுதந்திரமக்கள்கூட்டணியின் உறுப்பினரும்,நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி. சரித்த ஹேரத் தெரிவித்தார்.

இராஜகிரியவில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பஷில் ராஜபக்ஷ கொண்டுவந்த வரவு, செலவுத்திட்டத்தினை எதிர்த் தவர்கள், ரணில் விக்கிரமசிங்க கொண்டுவந்த வரவு,செலவுத்திட்டத்திற்கு இருகைகளையும் உயர்த்தி ஆதரவளிக்கின்றார்கள். அவ்வாறானால்அவர்களுக்கு எதற்கு தேசிய ஆட்சி?

தேசிய ஆட்சி அமைக்கப்படுவதற்கான நோக்கமானது, ரணில் விக்கிரமசிங்க ☞2

## தேசிய அரசு தொடர்பில் அரசுடன் பேசவேயில்லை

பிரதமர் பதவியையும் கோரவில்லை என்கிறார் சஜித்

'தேசிய அரசமைப்பது தொடர்பில் தற்போதைய அரசுடன் எவ்வித கலந்துரையாடலிலும் ஈடுபடவில்லை.'

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித்பிரேமதாஸதெரிவித்தார்.

'அமைச்சுப் பதவிகள் பற்றியோ அல்லது வரப்பிரதாசங்கள் குறித்தோ அரசுடன் நான் எந்தவொரு கலந் துரையாலிலும் ஈடுபட



வில்லை. தேசியஅரசுமற்றும் பிரதமர் பதவி பற்றியும் பேசவில்லை.

இருந்தும் அரசதரப்பால் திட்டமிட்ட அடிப்படையில் போலிப் பரப்புரைகள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன. ☞2

## பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு முன்னாள் சட்டமா அதிபர் அழைப்பு

### இன்று 9 மணிக்கு முன்னிலையாகிறார்

(தன்வீன்)

ஓய்வுபெறும் தினத்தில் வெளியிட்ட கருத்ததுத்தொடர்பில். வாக்குமூலம் பெறுவதற்காக பயங்கரவாத விசாரணைப் பிரிவில் இன்று காலை 9 மணிக்கு முன்னிலையாகுமாறு முன்னாள் சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி தப்புல டிலிவேராவிற்கு அறிவிக்கப் பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து அவர் வெளியிட்ட கருத்து தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், மூத்த பொலிஸ்அத்தியட்சகர்நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் பெரும் சதித்திட்டம் காணப்படுவதாக முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா 2021ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி தெரிவித்திருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற விதம், நேரம், தினம்மற்றும்ஏனைய விடயங்கள் அரசபுலனாய்வுச் சேவை எனப்படும் எஸ்.ஐ.எஸ் நிறுவனத்திற்கு கிடைத் தமையின் ஊடாக, பெரும் சதித்திட்டமொன்று இந்த தாக்குதலின் பின்னணியில் இருக்கின்றமை ☞2

## அமைச்சரவை மாற்றம் பற்றிய செய்தி வதந்தி

அமைச்சர் பந்துல தெரிவிப்பு

புதிய அமைச்சுப்பதவிகள் வழங்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றமை வதந்தி. எவ்வாறிருப்பினும் தேவையேற்படின் அமைச்சரவையில் திருத்தங்களை மேற்கொள்வதற்கும், புதிய நியமனங்களை வழங்குவதற்கும் ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செவ்வாய்க்கிழமை செய்தியாளர் சந்திப்பில் அமைச்சரவை மாற்றம் குறித்துக் கேட்கப்பட்டபோது அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவரர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை வதந்தி. இவ்வாறான வதந்திகள் குறித்து அமைச்சரவையில் அவதானம் செலுத்தப்படுவதில்லை.

அமைச்சரவை நியமனமொன்று வழங்கப் படுமானால் அது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ☞2

## விடைத்தாள் திருத்தம் தொடர்பில் புதுக் கதை சொல்கிறார் அமைச்சர்

கல்விப் பொதுத் தராதரஉயர்தரப்பரீட்சைவிடைத் தாள்கள் திருத்தும் பணியில் இருந்துபல்கலைக்கழக விரிவுரையாளர்கள் விலகியமையின் பின்னணியில் தீவிரவாதஅரசியல்குழுக்கள் உள்ளன என்று கல்வி அமைச்சர்சுசில்பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்விப் பொதுத் தராதரஉயர்தரப்பரீட்சைவிடைத் தாள்களைத் திருத்தும் பணியில் இருந்துபல்கலைக் கழக விரிவுரையாளர்கள் விலகியமையின் பின்னணியில் தீவிரவாத அரசியல் குழுக்கள் உள்ளன என்று புலனாய்வுப் பிரிவினருக்கு உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் கிடைத்துள்ளன. அதுதொடர்பில் எமக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தப் படாது காலம் தாழ்த்தப் படுவதால் மாணவர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர். அவ்வாறு மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ள மணவர்களை தமது அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குள் உள்வாங்கும் வேலைத்திட்டத்தை அந்தத் தீவிரவாதஅரசியல்குழுக்கள் முன்னெடுப்பதற்கான நகர்வுகளை முன்னெடுப் பதாகவும் தகவல்கள் அறியப்பட்டுள்ளன. ☞2

## முன்னாள் சட்ட மா அதிபர் லிவேராவிற்கு அதிகாரம் இருந்து ஏன் செயற்படவில்லை?

அதைத் தெரிந்துகொள்ளவே அவரிடம் விசாரணையாம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்பட்ட காலத்தில் சட்டமா அதிபராகப் பதவி வகித்தவர்என்றவகையிலும், தாக்குதல் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய அதிகாரங்கள் காணப்பட்டபோதும், அது தொடர்பில் தப்புல டி லிவேரா ஏன் நடவடிக்கை எடுக்கவில்லைஎன்றகேள்வி எழுவதாக நீதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாச ராஜபக் ஷ தெரிவித்தார்.

அவர் ஓய்வுபெறும் சந்தர்ப்பத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து வெளியிட்டகருத்துதொடர்பில் சட்டத்தை மதிப்பவர் என்ற அடிப்படையில் எனக்குச் சந்தேகம் எழுந்துள்ளதால் வாக்குமூலம் பெறுமாறு நானே அறிவுறுத்தினேன் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரச தகவல் திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்சம்பவம்தொடாபில் முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா ஓய்வு பெறும் தினத்தில் வெளியிட்ட கருத்தானது சிக்கலை ஏற்படுத்தியது.

குறித்த சம்பவத்தில் தான் காணும் விடயத்திற்கு அப்பால் சூழ்ச்சியொன்று உள்ளது,அதன்பின்னணியில் சூத்திரதாரி ஒருவர் உள்ளார் என அவர் தெரிவித்திருந்தார். அதனால் எமக்குப் பெரும் சிக்கல் எழுந்துள்ளது. குறித்த காலப்பகுதியில் அவரே சட்டமா அதிபாரகவும் கடமையாற்றியிருந்தார்.

பொலிஸார் வழங்கிய விசாரணை அறிக்கையில் முழுமையான தகவல்கள் இல்லையென்றால் மேலதிக விசாரணைகளைநடத்துமாறு கட்டளையிடும் அதிகாரமும் அவருக்கே இருந்தது.

கிடைத்த ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றைய கட்சிகளோடு சேர்ந்து முன்னணியும் இந்த விடயத்தில் தமிழ் மக்களின் பிரச்சினையில் போராட முன்வந்திருக்கிறதே என்கிற வகையில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்தது அந்தப் பங்களிப்பு. தமிழ் இனம் சார்ந்த விடயங்களில் கட்சியையும் தாண்டி முன்னணியும் சிந்திக்கும் என்கிற வகையில் அந்தப் பங்களிப்புப் பார்க்கப்பட்டது.

கூட்டம் நடந்துகொண்டிருந்தபோதே அதில் கலந்து கொண்டிருந்த பலரும் பல்வேறு தேவைகள் கருதி வெளியேறிச் சென்றிருந்தனர். ஒரு கட்டத்தில் அதுபோன்றே முன்னணியின் பிரதிநிதியும் வெளியேறிச்சென்றிருக்கிறார். இந்தப் பின்னணியில் அந்தக் கூட்டம் தொடர்பில் அறிக்கையிட்ட வவுனியாச் செய்தியாளர்கள் கூட்டத்தில் முன்னணி பிரதிநிதியும் கலந்து கொண்டிருந்தார் என்றுசெய்தியை வழங்கியிருந்தனர். அது ஊடகங்களிலும் வெளியாகி இருந்தது.

ஆனால், அந்தக் கூட்டத்தில் இருந்து தான் வெளி நடப்புச்செய்துவிட்டார் என்றும் வவுனியாமாவட்டப்பத்திரிகையாளர்கள் அதைத் திரித்துச் செய்தி வெளியிட்டுத் தனக்கு அரசியல் களங்கம் ஏற்படுத்திவிட்டார்கள் என்றும் முன்னணியின் வவுனியா மாவட்டத்தலைமைசமூகவலைத்தளங்களில் எல்லாம் கடுமையாகத் தாக்கிக் கருத்து வெளியிட்டு வருகின்றது.

வெடுக்குநாறியில் ஆதி சிவன் லிங்கத்தை உடைத்தெறிந்துஅட்டூழியம்புரிந்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கூட்டப்பட்ட கூட்டத்தில்தான் இந்த அக்கப்போர். இவர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து மக்களுக்குவிடியலைத்தேடித் தருவார்கள் என்பது வெறும் கானல் நீர்தான்.

இந்த விவகாரம் தொடர்பில் வவுனியா பத்திரிகையாளர் சங்கம் ஒன்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதன் விவரத்தை வாசகர்களுக்கு அப்படியே இங்கு தருகின்றேன். வவுனியா ஊடக அமையம் என்கிற அமைப்பு இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அச்சுறுத்தல்களுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் பணியாற்றும் ஊடகவியலாளர்களை இழிவுபடுத்தும் செயற்பாட்டை தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் வவுனியா மாவட்ட தலைமைகள் நிறுத்த வேண்டும்.

தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் வவுனியா மாவட்ட முக்கியஸ்தர் எஸ். தவபாலன் சமூக ஊடகத்தில் வவுனியா ஊடகவியாளருக்கு அவதூறை ஏற்படுத்தும் வகையில் வெளியிட்ட அறிக்கைக்கு எதிராக இந்த அறிக்கை வெளியிடப்படுகின்றது.

வவுனியா மாவட்டத்தில் பல்வேறு நெருக்கடிகள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் யுத்த காலத்திலும் யுத்தத்திற்கு பின்னரும் தமிழ் ஊடகவியலாளர்கள் சமூகப் பொறுப்புடன் செயற்பட்டு வருகின்றார்கள். அத்துடன், இலங்கையின் மூத்த ஊடகவியலாளரும் மாவட்டத்தின் அடையாளமுமாக திகழ்ந்த மாணிக்கவாசகம் ஐயா அவர்களையும் வவுனியா மாவட்டம் இழந்து நிற்கின்றது.

இந்நிலையில் தமிழ்த் தேசியமக்கள்முன்னணியின் வவுனியா மாவட்ட முக்கியஸ்தர் ஒருவர் சமூக ஊடகத்தில் வவுனியா ஊடகவியலாளர்களையும், உயிரிழந்த மூத்த ஊடகவியலாளரையும் இழிவுபடுத்தும் முகமாக தமது கட்சி உறுப்பினர் விட்ட தவறை மறைக்க செயற்பட்டமையை வவுனியா ஊடக அமையம் கண்டிக்கின்றது.

கடந்த 9 ஆம் திகதி வவுனியா வாடி வீட்டில் பல்வேறு கட்சிகள், பொது அமைப்புகளின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ஒருவர் கலந்து கொண்டு தனது கருத்துக்களை பதிவுசெய்திருந்தார். கூட்டத்தின் ஆரம்பம் முதல் பங்குபற்றிய அவர் கூட்டம் முடிவதற்கு முன்னர் அங்கிருந்துசென்றிருந்தார். ஆனால் கூட்டத்திலிருந்துவெளிநடப்பு செய்கிறார் என்று அவர் பதிவு செய்யவில்லை.

பலரும் தேவை கருதி இடைநடுவில் சென்றது போலவே குறித்த கட்சி உறுப்பினரும்சென்றிருந்தார். கூட்ட இறுதியில் பொது கட்டமைப்பும் தெரிவு செய்யப்பட்டது. குறித்த செய்தி அறிக்கையிடலின் போது தமிழ் தேசிய மக்கள் முன்னனி கலந்து கொண்டமையை ஊடகங்கள் வெளியிட்டு இருந்தன. இதுவே நடந்த சம்பவம்.

ஆனால், இதனைத் திரிவுபடுத்தி தாம் கூட்டத்தில் இருந்து வெளி நடப்பு செய்தார் எனவும் ஊடகவியலாளர்கள் தவறாக செய்தி பிரசுரித்துள்ளனர் னவும் குறிப்பிட்டு உயிரிழந்த மூத்த ஊடகவியலாளரது பெயரையும் உள்ளீர்த்து மாவட்ட ஊடகவியலாளர்களை அந்த கட்சியின் வவுனியா மாவட்ட முக்கியஸ்தர் ஒருவர் வசைபாடுவதை ஏற்கமுடியாது. இது தமிழ் ஊடகவியலாளர்களை அடக்கி ஒடுக்க எடுக்கும் ஒரு முயற்சியாகவும் எம்மால் பார்க்க முடிகிறது.

அரசின் அடக்கு முறைகளுக்கு எதிராக தமிழ் ஊடகவியலாளர்கள் போராடி வரும் நிலையில் தமிழ் தேசியம்சார்ந்துஇயங்கும்கட்சியின் மாவட்ட முக்கியஸ்தர் இவ்வாறுநடந்துகொண்டமை எம்மை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இதுதொடர்பில்கட்சிதலைமைக்கு ஊடக அமையம் தெரியப்படுத்த முயன்ற போதும் அவர்களை தொடர்பு கொள்ள முடியவில்லை .எனவே, நிகழ்வின் போது நடந்த உண்மை தன்மையை அறியாது தமது கட்சி உறுப்பினர் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துக்களை முன்வைத்தமை தொடர்பில் கட்சிக்குள் ஏற்பட்ட குழப்பத்தையடுத்து, அந்த சம்பவத்தை மறைக்க ஊடகவியலாளரையும், உயிரிழந்த மூத்த ஊடகவியலாளரையும் இழிவுபடுத்தும் விதமான இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதை கட்சியின் மாவட்ட மட்ட தலைவர்கள் நிறுத்த வேண்டும் எனவும், இது தொடர்பில் கட்சி தலைமை கவனம் செலுத்த வேண்டும் எனவும் வவுனியா ஊடக அமையம் கோருகின்றது.

**இடிமின்னல்**

## ஐக்கிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சி என்பது மக்களுக்காகக் குரல் கொடுத்து மக்களை அணி திரட்டக்கூடியதாக இருக்க வேண்டும். அந்தச் சக்தி தற்போது ஐக்கிய மக்கள் சக்திக்கு இல்லை - என்றார்.

## நெருக்கடி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டை மேலும் நெருக்கடிகளுக்குள் கொண்டு சென்றுவிட்டார் என்கிற யதார்த்த உண்மைக்குள் அனைவரையும் பங்காளிகளாகும் முயற்சிதான்.

சுதந்திர மக்கள் சபையின் எந்தவொரு உறுப்பினரும் தேசிய அரசில் இணையப்போவதில்லை. அவ்வாறு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் யாராவது இணைவார்களாயின் அது தற்கொலைக்குச் சமனாகும் - என்றார்

## சஜித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ளவர்கள் விலை போகமாட்டார்கள்; சூதாட்ட அரசியலில் சிக்க வைக்கவும் மாட்டார்கள்.' - என்றார். (02)

## பயணிகள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பஸ் கிளிநொச்சி டிப்போக்குச் சொந்தமானது என்றுதெரியவந்துள்ளது. (02)

## அத்தியாவசிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வசதிகளும் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன.

மக்களின் பொதுவாழ்க்கையைப் பேணுவதற்கு உரிய நிறுவனங்களினால் வழங்கப்படும் சேவைகள் இன்றியமையாதவை என்பதால் அந்தச் சேவைகளில் தடையோ அல்லது இடையூறுகளோ ஏற்படக்கூடும் என்பதைக் கருத்தில் கொண்டே அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

## முன்னாள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்களுக்கு அமைவாக வேறொருவர் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டியிருப்பின் அது தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடும் அதிகாரமும்சட்டமாஅதிபருக்கு இருந்தது.

அதுமட்டுமன்றி அவர் நீதிவான் நீதிமன்றத்திற்குச் சென்று சிலர் இதில் தொடர்புபட்டுள்ளார்கள் என்றும் சம்பவகளுடன் பிறிதொரு நபர் தொடர்பு பட்டுள்ளார் என்றும் சுட்டிக்காட்டி நீதிவான் நீதிமன்றத்தின் ஊடாக பொலிஸாருக்கு விசாரணைகளுக்கான கட்டளை பிறப்பிக்கும் அதிகாரமும் காணப்பட்டது.

ஆனால் அவர் ஓய்வு பெறும் நாள் வரையில் அமைதியாக இருந்துவிட்டு, குறித்த தினமன்று தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் மறைகரங்கள்இருந்ததாகவும், அதன் பின்னால் சதித்திட்டம் காணப்பட்டதாகவும், நபர் ஒருவர் உள்ளார் எனவும் கூறினார். அவர் எதன் அடிப்படையில் அவ்விதமான கருத்தை வெளியிட்டார் என்பதை அறிந்துகொள்ளும் உரிமை நாட்டு மக்களுக்கு இருக்கின்றது.

சட்டத்தினை மதிப்பவர் என்ற அடிப்படையில், குறித்த விடயம் சம்பந்தமாக சட்ட நடவடிக்கைகள் ஏன் எடுக்கப்படவில்லை என்பதுள்ளிட்ட விடயங்களை அறிந்துகொள்ள வேண்டியுள்ளது. அவருடைய கருத்தால் குறித்த விசாரணை முழுமை அடையவில்லை என்ற தோற்றமும் எழுந்துள்ளது. ஆகவே அவரிடத்தில் விசாரணைகளை மேற்கொண்டு அந்தக் கருத்தின் பின்னணியை அறியுமாறு நானே தற்போதைய சட்டமா அதிபருக்கு அறிவுறுத்தினேன். அதற்கமையவே அவர் பொலிஸ்மா அதிபர் ஊடாக நடவடிக்கைகளை முன்னெடுத்தார். அதனடிப்படையில்தான் முன்னாள் சட்டமா அதிபர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார் - என்றார்.

## தேசிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான் கருதவில்லை.

வீழ்ச்சி அடையும் அரசில் இணைந்து கொள்வதற்கு எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் அரசியல் அறிவு அற்றவர்களாகஇருப்பதற்குவாய்ப்புக்கள் இல்லை. எமக்குகிடைத்துள்ள தகவல்களின் பிரகாரம், ஆட்சித் தரப்பபிலிருக்கும் சிலரே எதிரணியில் இணையவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது -என்றார்.

## அமைச்சரவை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதிசமர்ப்பித்தஅமைச்சரவைப் பத்திரத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தினால் 3 பில்லியன் அமெரிக்க டொலர் கடந்த மாதம் 22 ஆம் திகதி வழங்கப்பட்டது.

48 மாத காலப்பகுதிக்கு வழங்கப்பட்டுள்ள இந்தக்கடன் தொடர்பான ஆவணங்கள் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பான நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாட்டை உறுதிசெய்து கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட பிரதான கொள்கைகளை சட்டமாக மாற்றுவதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் குறித்த விடயம் சம்பந்தமாக பரந்துபட்ட வாதவிவாதங்கள் நடத்தப்பட்டு அனைவரினது ஒத்துழைப்புடன் அதனை நாடாளுமன்றத்தில் அங்கீகரிப்பதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது - என்றர்

## விடைத்தாள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிள்ளைகளும்உயர்தரப்பரீட்சைகளை எழுதியிருந்தால் அவர்கள் விடைத்தாள்களைத் திருத்தும் பணிக்கு ஒத்துழைப்பார்கள்என்றுகருதுகின்றேன். அதேநேரம், ஆசிரியர் சங்கத்தினரிடம் விடைத்தாள்கள் திருத்தும் பணிகளுக்கு உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன் - என்றார்.

## பந்துல .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுக்கு அறிவிக்கப்படும்.

அதற்கமைய புதிய நியமனங்களை வழங்குவதற்கும், அமைச்சரவையில் மாற்றங்களை மேற்கொள்வதற்கும் ஜனாதிபதிக்கும் அதிகாரம் உண்டு..

இந்த அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை - என்றார்.

## ராஜித ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்த்தது. இதையடுத்து நாம் அரசுடன் இணைந்தோம். நாட்டை மீட்டோம்.

அன்றுபோலவேஇன்றும் நெருக்கடி உள்ளது. எனவே, நாட்டை மீட்கக் கட்சி பேதம் பாராதுஅனைவரும்ஒன்றுபட வேண்டும்.' - என்றார். (02)

## பயங்கரவாத .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படுவதாக அவர் கூறியிருந்தார்.

இந்தச் சதித்திட்டத்துடன் தொடர்புடைய அனைவரும் சாட்சியங்களின் ஊடாக வெளிப்படுத்தப்படவேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு தொலைபேசி இலக்கம்
076 443 80 22

# ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் அலரி மாளிகையில் தேசிய இப்தார்

முஸ்லிம்களின் புனித ரமழான்நோன்பைமுன்னிட்டு நடத்தப்படும் தேசிய இப்தார் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கமற்றும்பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது.

தேசிய நல்லிணக்கத்துக்கான ஆசிர்வாத என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன கேட்டுக் கொண்டார். முஸ்லிம்களின் ரமழான் நோன்பு மாதம் ஆன்மீக சக்தியை மேம்படுத்துகின்ற அதேவேளை, இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்திற்குவழிவகுக்கின்றது என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

அமைச்சர் காதர் மஸ்தான், ஊவா மாகாண ஆளுநர் முஸம்மில், நாடாளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், ஏ.எச்.எம். பௌசி, எச்.எம்.எம். ஹரீஸ், எம்.எஸ். தௌபிக், யதாமினி குணவர்தன, அலி சப்ரி ரஹீம். எஸ்.எம்.எம்.முஷாரப்



நிகழ்வுகளும் இதன்போது இடம்பெற்றன.

தேசியஒருமைப்பாட்டை வளர்ப்பதற்குப் பல தசாப்தங்களாகத் தொடர்ச்சியான பங்களிப்பை வழங்கி வரும் முஸ்லிம்கள்எதிர்காலத்திலும் ஒற்றுமையான இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்

நிகழ்வில்கலந்துகொண்டு பயான் உரை நிகழ்த்திய மௌலவிமார்களுக்கு அன்பளிப்புக்களைஜனாதிபதி வழங்கினார்.

முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமானமஹிந்தராஜபக்ச, அமைச்சர்களான அலி சப்ரி, நஸீர் அஹமட், விதுர விக்கிரமநாயக்க, இராஜாங்க , மர்ஜான் பளீல் , தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும்ஜனாதிபதியின் பணிக்குழாம்பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிநாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (02)










காலைக்கதிர்
Kalaikkathir

# கொட்டடி பிள்ளையார் ஆலய சிலையை உடைக்கும் முயற்சிகள் படு தோல்வி!

யாழ்ப்பாணம், பருத்தித்துறை கொட்டடி பிள்ளையார் கோயில் ஆலயத்தின் பிள்ளையார் சிலை காடையர்களால் உடைத்து எடுத்துச் செல்வதற்கு எடுத்த முயற்சி தோல்வியடைந்துள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை கொட்டடி பிள்ளையார் கோயில் ஆலயத்தின் முகப்பில் உள்ள பிள்ளையார் சிலையே சில விசமிகளால் உடைத்து எடுத்துச்செல்வதற்கான முயற்சிகள் இடம்பெற்றிருக்கின்றன.

பருத்தித்துறை கொட்டடி





பிள்ளையார் ஆலயத்தின் முகப்பில் உள்ள பிள்ளையார் சிலை உண்டியலுடன் காணப்படுகிறது.

இந்நிலையில் சம்பவதினம் காலை அடியவர் ஒருவர் குறித்த சிலையை வழிபட்ட போது பிள்ளையார் சிலையின் கால் பகுதி உடைக்கப்பட்டிருப்பதை அவதானித்துள்ளார்.

இந்த சிலையும், அமைக்கப்பட்டிருக்கும் பீடமும் கம்பிகளால் பிணைக்கப்பட்டுள்ளதால் சிலையை அப்புறப்படுத்தும் முயற்சி கைகூடவில்லை என அந்தப் பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

# அரை சொகுசு பஸ் சேவைகள் அடுத்த மாதத்துக்குள் நிறுத்தம்

நாட்டின் அரை சொகுசு பஸ் சேவைகள் அடுத்த மாதத்துக்குள் நிறுத்தப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அரை சொகுசு பஸ் சேவை தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதையடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகதேசியபோக்குவரத்து அணைக்குழுவின் தலைவர் நிலன் மிராண்டா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

நாட்டில் தற்போது 430 அரை சொகுசு பஸ்கள் சேவையில் ஈடுப்படடுள்ளதுடன் தற்போது அரை சொகுசு பஸ்களின் உரிமையாளர்களுக்கு தங்கள் பஸ்களை சாதாரண பஸ்களாக அல்லது சொகுசு பஸ்களாக மாற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான அரை சொசுகு பஸ்களையும் சாதாரண சேவைகளாக அல்லது சொசுகு சேவைகளாக மாற்றிக் கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அரை சொகுசு பஸ்களை பொது சேவை அல்லது சொகுசு சேவையாக மாற்ற விரும்பும்



அனைத்து பஸ் உரிமையாளர்களும் மே 31ஆம் திகதிக்கு முன்னர் தேவையான மாற்றங்களைச் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
- என்றார்.

## மத்திய வங்கியில் 50 லட்சம் ரூபா மாயம் சந்தேக நபர்களை கைதுசெய்ய பணிப்புரை!

மத்திய வங்கியில் 50 லட்சம் ரூபா திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்களைக் கைதுசெய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுணாவெல கோட்டை பொலிஸாருக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

நீதிமன்றத்துக்கு இந்த விவகாரம் தொடர்பில் கோட்டை பொலிஸார் சமர்ப்பித்த அறிக்கையை கவனத்தில் எடுத்துக்கொண்ட நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

மத்திய வங்கியின் உயர் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டிருந்த பணம் திருடப்பட்டமை தொடர்பில் ஏற்கனவே திணைக்களத்தின் பல அதிகாரிகளிடம் வாக்குமூலங்களை பதிவு செய்து வருவதாகவும் கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

## இளம் ஆசிரியைமீது பாலியல் துஷ்பிரயோகம்: மினுவாங்கொடை பாடசாலை அதிபர் கைது!

இளம் ஆசிரியை ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் மினுவாங்கொடை தனியார் பாடசாலை ஒன்றின் அதிபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பாடசாலையின் 60 வயதுடைய அதிபர், பாடசாலை மூடப்பட்டிருந்த போது, 22 வயதுடைய ஆசிரியையை விசேட பணிக்காக பாடசாலைக்கு வரவழைத்தே இந்த சம்பவம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் நடந்த உடனேயே மினுவாங்கொடை பொலிஸின் பெண்கள் மற்றும் குழந்தைகள் பணியகக் கிளையில் குறித்த ஆசிரியர் முறைப்பாடு செய்ததையடுத்து, அதிபர் கைது செய்யப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்ட ஆசிரியை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சந்தேக நபரான அதிபரிடம் மினுவாங்கொடை பொலிஸ் பிரிவின் பெண்கள் மற்றும் சிறுவர் பணியகக் கிளையினர் மேற்கொண்டுவருகின்றனர்.

# தேசிய அரசு அமைக்கும் எண்ணமெதுவும் இல்லை

மஹிந்த அமரவீர திட்டவட்டம்



தேசிய அரசாங்கத்தை அமைக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கத்தை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதியோ அமைச்சரவையோ இதுவரையில் எந்த தீர்மானத்தையும் எடுக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாகக் கலந்துரையாடல் கூட இடம்பெறவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு பணிகள் நிறைவடையும் என எதிர்ப்பார்ப்பு



இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு பணிகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்திற்குள் நிறைவடையும் என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த நடவடிக்கைகள் தொடர்பான முன்மொழியப்பட்ட காலவரையறைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மே மாத இறுதிக்குள் புதிய மின்சார சட்ட மூலம் நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## வயோதிபப் பெண் ஒருவர் கழுத்தறுத்துப் படுகொலை

மிஹிந்தலை - கள்ளஞ்சிய பகுதியிலுள்ள வீடொன்றில் 63 வயதுடைய பெண் ஒருவர் கழுத்து அறுத்து கொல்லப்பட்டுள்ளார் என்று கள்ளஞ்சிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில், மகாகனதரவ என்ற பிரதேசத்தில் வசித்து வந்த டி.பி.சந்திராவதி (வயது 63) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

வீட்டின் சமையலறையில் குறித்த பெண் கூரிய ஆயுதத்தால் கழுத்து அறுத்து கொலைசெய்யப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது என்று கள்ளஞ்சிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீதிவான் விசாரணையும் பிரேத பரிசோதனையும் நேற்று இடம்பெற்றன. (02)

## உத்தியோகபூர்வ இல்ல குளியலறையில் சடலமாக மீட்கப்பட்டார் வைத்தியர்!

உடமாதுர பிரதேச ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் அவரது உத்தியோகபூர்வ இல்லத்தின் குளியலறையில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

36 வயதுடைய திருமணமான ஆயுர்வேத வைத்தியரான மதுசங்க ஜயசூரிய என்பவரே உயிரிழந்துள்ளார்.

உடமதுர ஆயுர்வேத வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர் ஒருவர் திங்கட்கிழமை காலை உத்தியோகபூர்வ இல்லத்தின் குளியலறைக்குச் சென்றபோது குறித்த வைத்தியர் உயிரிழந்து காணப்பட்டமை தொடர்பில் தெரிபஹ பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். இதனையடுத்து தெரிபஹ பொலிஸார் ஆயுர்வேத வைத்தியசாலைக்கு சென்று சடலத்தை மீட்டதுடன் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## புத்தாண்டில் காயமடைந்த 185 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை

தமிழ்-சிங்கள புத்தாண்டு தினமான கடந்த 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் இடம்பெற்ற விபத்துக்களினால் காயமடைந்த 185 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 145 ஆண்களும், 40 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறித்த இரு தினங்களிலும் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களினால் 44 பேர் காயமடைந்த நிலையில் தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும், இந்த இரண்டு நாள்களில் தற் கொலைக்கு முயன்ற இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

புத்தாண்டின் போது பட்டாசு வெடித்ததில் ஒருவரே காயமடைந்துள்ளார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## போராட்டங்களுக்கு இன்னும் அஞ்சுகின்றனர் ஆட்சியாளர்கள்

கொழும்பின் இதயத்தில் அமைந்துள்ள காலி முகத் திடலில் இனிமேல் அரசியல் கூட்டங்களோ, போராட்டங்களோ நடத்துவதற்கு அனுமதிப்பதில்லை என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது. தற்போது மறுசீரமைக்கப்பட்டுவரும் காலி முகத் திடல் பகுதியை பொதுமக்களின் மகிழ்வூட்டல் நடவடிக்கைகளுக்கும் சமய நிகழ்ச்சிகளுக்கும் மட்டும் திறந்துவிடுவது என்றும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

காலி முகத் திடலில் தொடங்கப்பட்ட "கோட்டா கோ கம" போராட்டம்தான் அரசுத் தலைவர் கோட்டாபய ராஜபக்சவை அந்தப் பதவியிலிருந்து விரட்டியடித்தது. ராஜபக்ச குடும்பத்தையும் அதிகாரப் பிடியிலிருந்து அகற்றியது. பல லட்சக்கணக்கானவர்களைத் தன்னகத்தே வைத்திருக்கும் தகுதியைக் கொண்டது காலி முகத் திட்டல். அதனாலேயே அரச எதிர்ப்புப் போராட்டமான அரகலய மெல்ல மெல்ல வளர்ந்து ஆட்சியாளரை விரட்டியடிக்கும் பலத்தைப் பெறுமளவிற்கான வசதியை அது வழங்கியது.

அரகலயவிற்கு முன்னரும் காலி முகத் திடலில் பல அரசியல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. குறிப்பாக வருடாந்த மே தினக் கொண்டாட்டங்களில் ஏதாவது ஒரு கட்சியின் மாநாடு இங்கு நடப்பது வழமையாக இருந்து வந்திருக்கிறது. இதே காலி முகத் திடல் தமிழர்களின் போராட்டக் களமாகவும் இருந்திருக்கிறது.

1956 ஆனி 5 இதே இடத்தில் சாத்வீக வழியில் உரிமைக்காக ஈழத் தமிழ் இனத்தின் காந்தியான தந்தை செல்வா தலைமையில் தமிழர்கள் அமைதியாக போராடியபோது தாக்கப்பட்டுக் குருதி சிந்தினார்கள்.

அப்போதைய தலைமை அமைச்சர் எஸ்.டபிள்.யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா தனிச்சிங்களசட்ட முன்மொழிவை ஆனி 5 நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தபோது அதனை எதிர்த்துத் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும்,தொண்டர்களும் சத்தியாக்கிரகம் இருந்தபோது கடுமையாகத் தாக்கப்பட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் மண்டைகள் உடைக்கப்பட்டன.

அதுமட்டுமல்ல அதைத் தொடர்ந்து கட்டவிழ்த்துவிடப்பட்ட தமிழர்களுக்கு எதிரான வன்முறையால் கொழும்பில் தமிழர்களின் வர்த்தக நிலையங்கள், வீடுகள் சூறையாடப்பட்டன. ஆடி 11 முதல் கிழக்கில் சில நாட்கள் நடந்த வன்முறைகளில் கல்லோயா, அம்பாறையில் 200 தமிழர்கள் வரை கொல்லப்பட்டனர்.

இவை எவற்றையும் பொருட்படுத்தாது இனங்களுக்கு இடையே பெரும் குரோதத்துக்கு வழிவகுத்து இரத்த ஆறு ஓடக்காரணமான தனிச்சிங்களச் சட்டம் (Official Language Act 33 of 58) ஆடி 15 நிறைவேற்றப்பட்டது. 53 மணி நேர விவாதத்தின் பின் அது நிறைவேறியது. ஆதரவாக 66 வாக்குகளும் எதிராக 29 வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சியும் ஆதரவளித்தது .தமிழ் அரசு, தமிழ்க் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், சம சமாஜ கட்சிகள் எதிர்த்தன. எதிர்ப்புக்கள் புறக்கணிக்கப்பட்டன.

காலி முகத் திடலில் தொடங்கிய தமிழர்களின் போராட்டம் ஆட்சியார்களால் அடக்கிஒடுக்கப்பட்ட காரணத்தால் அங்கு தொடர்ந்தும் அரசியல் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டு வந்தது. ஆனால் கடந்த வருடனம் சிங்களவர்கள் அங்கு நடத்திய போராட்டம் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திவிட்டதால், அச்சமடைந்துள்ள ஆட்சீயாளர்கள் இன்று அங்கு அரசியல் நிகழ்ச்சிகளை நடத்துவதைத் தடை செய்துள்ளனர்.

இந்தத் தடை மக்கள் மீண்டும் கிளர்ந்தெழுவார்கள் என்று ஆட்சியாளர்கள் கொண்டுள்ள அச்சத்தையே காட்டுகின்றது. பொருளாதார மீட்சி குறித்து அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்னதான் சாதகமாகப் பேசினாலும், நாட்டின் நிலமை மக்களை மீண்டும் கிளர்ச்சியில் ஈடுபடத் தூண்டும் என்கிற அச்சத்தை அவர் கொண்டிருக்கிறார் என்பதை காலி முகத்திடல் தடை வெளிபடுத்துகின்றது.

# இலங்கையில் நகர மயமாக்கல் 45 சதவீதமாக வளர்ச்சியடையும்

### தேசிய பௌதீகத் திட்டமிடல் திணைக்களம் அறிவிப்பு

குறைந்த மட்டத்தில் இருந்த இலங்கையின் நகர மயமாக்கல் 2012-2022 பத்து வருட காலப்பகுதியில் 45 வீதம் ஆக அதிகரித்துள்ளதாக அண்மைய கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

யமாதல் தொடர்பில் கடந்த 2012 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. கணக்கெடுப்பின்படி, நாட்டின் நகரமயமாக்கல் 18 வீதம் ஆகும்.

மக்கள் தொகை அடர்த்தி, அல்லாத தொழிலாளர்களின் எண்ணிக்கை போன்ற அளவுகோல்களின் அடிப்படையில் ஒரு பகுதி அளவிடப்படுகிறது.

அதன் படி கொழும்பு மாவட்டத்தில் தற்போதுள்ள அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும். அமைச்சரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் மேலதிக பணிகள் மேற்கொள்ளப்படும் என தேசிய பௌதீக திட்டமிடல்



நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரையின் பேரில் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தால் இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

அதன்படி, நகர மற்றும் கிராம திட்டமிடல் சட்டத்தின்படி, தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங் களுக்கு அமைய இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டதாக அதன் பணிப்பாளர் நாயகம் காமினி ஹெவகே தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நகரம வீடுகள், 10 கி.மீ.க்குள் அமைந்துள்ள பல்பொருள் அங்காடிகள், துணிக்கடைகள், பெற்றோல் நிலையங்கள், வங்கிகள், தனியார் பள்ளிகள் மற்றும் தனியார் வைத்தியசாலைகள், குறிப்பிட்ட உள்ளூராட்சி மன்றத்தின் கிராம அதிகாரிகளின் எல்லைக்குள் அமைந்துள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை, வாடகை மற்றும் குத்தகை அடிப்படையில் வழங்கப்படும் வீடுகள், நகர மயமாக்கல் உள்ளூராட்சி அமைப்புகளால் சேகரிக்கப்படும் கழிவுகளை முறையாக அகற்றுதல், உள்ளூராட்சி மன்ற பகுதியில் உள்ள விவசாயம் ஹோமாகம மற்றும் கொலன்னாவ ஆகிய இரண்டு உள்ளூராட்சி சபைகளும் கம்பஹா மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளும் வேகமாக நகரமயமாகியுள்ளதாக கணக்கெடுப்பின் மூலம் தெரியவந்துள்ளது என்று தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் காமினி ஹேவகே தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டின் மற்ற பகுதிகளும் வேகமாக நகரமயமாகி வருகின்றன.

இந்த கணக்கெடுப்பின் முடிவுகள் எதிர்காலத்தில் அமைச்சரவை பத்திரத்தில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் காமினி ஹேவகே மேலும் தெரிவித்தார். ஒரு நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சி நகரமயமாக்கல் மூலம் அளவிடப்படுகிறது. 2012 இற்கு முன், நாடு நகரமயமாக்கலில் மெதுவான வளர்ச்சியைக் காட்டியது. ஆனால் 2010 களின் தொடக்கத்தில், நாட்டின் நகரமயமாக்கல் மின்சாரம், போக்குவரத்து, தகவல் தொடர்பு, சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளின் வளர்ச்சி மற்றும் தொழில்கள் மற்றும் வர்த்தகத்தின் விரிவாக்கத்துடன் துரிதப்படுத்தப்பட்டது.

# குரங்குகளுக்கு பதிலாக அரசியல்வாதிகளை சீனாவின் ஆயவுக்காக ஏற்றுமதி செய்யுங்கள்

### ஏனெனில் அவர்களுக்கு மூளை இல்லை என்கிறார் சுற்றாடல் நிபுணர்

குரங்குகளுக்கு பதிலாக நாட்டை நாசம் செய்த அரசியல்வாதிகளை விஞ்ஞான ஆய்வுகளுக்காக ஏற்றுமதி செய்யவேண்டும். அரசியல்வாதிகளின் மூளையை உணவிற்கு பயன்படுத்த முடியாது. ஏனெனில் அவர்களுக்கு மூளை கிடையாது. இவ்வாறு சுற்றாடல்துறை நிபுணர் நயனக ரன்வெல்ல வலியுறுத்தினார். கொழும்பில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

விவசாயப்பயிர்களுக்குக் குரங்குகளால் பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே அதை கட்டுப்படுத்த ஒரு இலட்சம் குரங்குகளை சீனாவுக்கு வழங்க இந்த ஆட்சி தீர்மானித்துள்ளது. சீனாவில் உள்ள மிருககாட்சிசாலைகளுக்கு குரங்குகளை வழங்குவதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஒருஇலட்சம்குரங்குகளை சீனாவுக்கு வழங்குவதால் விவசாய பயிர்களுக்கு காட்டு விலங்குகளால் ஏற்படும் பாதிப்புக்கு நிரந்தர தீர்வு காண முடியாது.

வன விலங்குகளின் வாழ்விட சூழல் அழிக்கப்படும்போது விலங்குகள் மனித நடவடிக்கைக்கு எதிராக செயற்படும். வனவிலங்குகளின் வாழ்விடத்தை பாதுகாக்க ஆட்சியாளர்கள் கொள்கை அடிப்படையில் உறுதியான திட்டங்களை வகுக்கவேண்டும்.

ஒரு இலட்சம் குரங்குகள் சீனாவில் உள்ள மிருகக் காட்சிசாலைக்குதான் உண்மையில் வழங்கப்படுகிறதா என்பதில் பெரும் சந்தேகம் காணப்படுகிறது.

சீனாவில் குரங்கு மூளையை கொண்டு சமைக்கும் உணவு பிரபல்யமானது. உணவு உற்பத்திகளுக்காக குரங்குகள் கோரப்படலாம்.

விஞ்ஞானஆய்வுநடவடிக்கைகளின் இறுதி பரிசோதனைகள் குரங்குகளை கொண்டுமுன்னெடுக்கப்படும். மூன்றாம்தலைமுறைஆய்வுகளுக்கு குரங்குகள் பயன்படுத்தப்படும்.



மனிதனுக்கும் குரங்குகளுக்கும் அறிவியல் ரீதியில் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. ஆகவே விஞ்ஞான ஆய்வு கூடங்களுக்காக குரங்குகள் ஏற்றுமதி செய்யப்படுகிறதா என்ற சந்தேகம் காணப்படுகிறது. குரங்குகளுக்குப் பதிலாக நாட்டை நாசம் செய்த அரசியல்வாதிகளை ஏற்றுமதி செய்யவேண்டும். மூளை உணவுகளுக்காக அரசியல்வாதிகளை பயன்படுத்த முடியாது. ஏனெனில் அரசியல்வாதிகளுக்கு மூளை என்பதொன்று கிடையாது. அரசியல்வாதிகளைவிஞ்ஞான ஆய்வு களுக்காக பயன்படுத்தினால் நாட்டுக்கு ஏதும் பயன் கிடைக்கும் - என்றார்.

# நெருக்கடிக்குள் கொழும்பு வைத்தியசாலை: குணமடைந்தும் வீடு செல்லாத நோயாளிகள்

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பாதுகாவலர்கள் இன்றி அதிகளவான நோயாளர்கள் தங்கியிருப்பதால், நாளாந்த வைத்தியசாலை நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சிக்கல்நிலை ஏற்பட்டுள்ளது.

தினமும் சுமார் 5 பேர் குணமடைந்து வைத்தியசாலையில் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், மருத்துவமனை நிர்வாகத்தால் மேலதிக செலவு செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷன் பெல்லென தெரிவித்தார். அம்பியூலன்ஸ் ஊடாக பலர் சிகிச்சைகளுக்காக அழைத்து வரப்படுகின்றனர். அவர்கள் சிகிச்சைகளின் பின்னர் குணமடைந்திருப்பினும், பொறுப்பேற்க எவரும் வருவதில்லை. அவர்களில் பெரும்பாலானோர் வயோதிபர்களாவர். குணமடைந்த சிலருக்கு வீடு செல்வதற்கான வழிதெரியவில்லை. அவ்வாறு வைத்தியசாலையில் உறவினர்கள் எவரேனும் தங்கியிருப்பின் அவர்களை வீட்டிற்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யுமாறும் அவர் கோரிக்கைவிடுத்துள்ளார். (02)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

## சுருக்குவலை உள்ளிட்ட சட்டவிரோத தொழில்களை நிறுத்த வலியுறுத்தி

# முல்லைத்தீவில் திங்களன்று மீனவர்கள் போராட்டம்












முல்லைத்தீவுகடலில் இடம்பெற்றுவரும்சட்டவிரோத கடற்தொழில் நடவடிக்கையினை கட்டுப்படுத்தக் கோரி வட்டுவாகல் கடற்படை முகாமை முற்றுகையிட்டு திங்கட்கிழமை மீனவர்கள் போராட்டம் நடத்தினர்.

முல்லைத்தீவு கடலில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் சுருக்குவலை மற்றும் ஒளிபாச்சி மீன்பிடித்தல் போன்ற சட்டவிரோத கடற்தொழில் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த கோரியே வட்டுவாகல் பாலத்தில் இருந்து கோட்டபாய கடற்படை முகாம் வரை சென்ற மீனவர்கள் அங்கு கடற்படை முகாமை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தினை சேர்ந்த கடற் தொழில் அமைப்புக்கள் ஏற்பாடு செய்த இந்தக் கவனவீர்ப்பு போராட்டத்தில் பலநூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர். முல்லைத்தீவு கடலினை நம்பி 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட மீனவ குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்த நிலையில் சாலை தொக்கம் கொக்கிளாய் வரையான கடற்பரப்பில் சட்டவிரோத கடற்தொழில் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றன. இதனால் மீனவர்களின் வலைகள் அறுக்கப்பட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் சிறு மீன்கள் அழிக்கப்படுகின்றன – என்று போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

மீனவர்களின் வாழ்வாதாரத்தினைக் கருத்தில் கொண்டு சட்டவிரோத கடற்தொழில் நடவடிக்கையினை இலங்கை கடற்படையினர் கட்டுப்படுத்தவேண்டும் என்றும் கடற்தொழில் அமைச்சர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப் பட்ட தீர்மானத்திற்கு அமைய காவல் அரண்களை அமைத்து இதனைக் கட்டுப்படுத்தித் தருமாறும் மீனவர்கள் கோரிக்கை வைத்தனர்.

தமது கோரிக்கை அடங்கிய மனுக்களை கிழக்கு பிராந்திய கடற்படை கட்டளை தளபதிற்கும் கோட்டபாய கடற்படை முகாம் தளபதியிடமும் மீனவர்கள் கையளித் தனர்.

# அழகி, அழகன் தெரிவு, மரதன் ஓட்டப் போட்டிகள் சைக்கிளோட்ட போட்டிகளுக்கு விண்ணப்பம் கோரல்

ஜனாதிபதி அலுவலகம் மற்றும் அமைச்சுக்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள ‘‘வசத் சிரிய 2023’’தமிழ் சிங்கள புத்தாண்டு போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

அனைத்து விண்ணப் பங்களையும் www.pmd.gov.lk இணைய பக்கத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### அழகன், அழகிப் போட்டி

“வசத் சிரிய புத்தாண்டு” அழகன் / அழகி (திறந்த சுற்று) போட்டிகளுக்காக 03 மாதங்களுக்குள் எடுக்கப்பட்ட வர்ணப் புகைப்படத்துடன் விண்ணப்பிப்பது அவசியமாகும். விண்ணப்பதாரர்கள் 20-35 வயதெல்லைக்குட் பட்டவர்களாக இருத்தல் அவசியம்.

விண்ணப்படிவங்களை பூர்த்தி செய்து chiefacct.pd@presidentsoffice.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 2023.04.20 ஆம் திகதி 3.00 மணிக்கு முன்னதாக அனுப்பிவைக்கவும்.

முதலாவது, இரண்டாவது, மூன்றாவது இடங்களைபெறுவோருக்கு பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும்.

போட்டி நிபந்தனைகள் தொடர்பிலான இறுதி முடிவு ஏற்பாட்டு குழுவுடையதாகும். மேலதிக தகவல்களுக்கு தொ.இல 0702025095 ஊடாக ஏ.ஜீ.எம்,சங்கா (ஒருங்கிணைப்பாளர்) அவர்களை தொடர்புகொள்ளமுடியும்.

### மரதன் ஓட்டம்

அதேபோல் “வசத் சிரிய” மரதன் ஓட்டப் போட்டிகளில் பங்கெடுக்க விண்ணபிக்கும் விண்ணப்பதாரர்கள் 20கிலோ மீற்றர்களுக்கும் அதிகமான தூரம் ஓடக்கூடியவர்கள் என வைத்திய சான்றிதழுடன் விண்ணப்பிப்பது அவசியமாகும்.

இந்த விண்ணப்படிவங்கள் 2023 ஏப்ரல் 21 ஆம் திகதி 12.00 மணிக்கு முன்பாக ஜனாதிபதி அலுவலகத்தின் பாதுகாப்பு பிரிவினரிடம் கையளிக்கப்பட வேண்டும். Priyanthalalwkas@gmail.com மின்னஞ்சல் முகவரி அல்லது WhatsApp எண் 0710573828 ஊடாகவும் அவற்றை அனுப்பலாம்.

மரதன் போட்டிகளின் (ஆண்கள்) முதலாமிடம்பெறுபவருக்கு 75,000 ரூபாவும் இரண்டாம் இடம் பெறுவபவருக்கு 50,000 ரூபாவும் மூன்றாமிடம் பெறுபவருக்கு 30,000ரூபாவும் வழங்கப் படும். நான்கு தொடக்கம் பத்து வரையிலான இடங்களை பெறுவோருக்கு 7500 ரூபா வீதம் வழங்கப்படும்.




மகளிருக்கான மாரதன் ஓட்டப் போட்டியில் முதலிடம் பெறுபவருக்கு 50,000 ரூபாவும், 2 ஆம் இடம் பெறுபவருக்கு 30,000 ரூபாவும், மூன்றாம் இடம் பெறுபவர்களுக்கு 20,000 ரூபாவும், நான்காம் முதல் பத்தாம் இடங்களை பெறுபவர்களுக்கு தலா 7,500 ரூபாவும் வழங்கப்படும்.

### சைக்கிளோட்டம்

அதேபோல் ஸ்டேண்டட் சைக்கிளோட்டப் போட்டிகள் (ஆண்/பெண்) நாடுதழுவிய ரீதியில் நடத்தப்படவுள்ளது. இப்போட்டிகளை இலங்கை விமானப் படை மற்றும் இலங்கை சைக்கிளோட்ட கழகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்யவுள்ளன.

காலி முகத்திடலில் இருந்து, நீர்க்கொழும்பு வீதியூடாக, ஜா-எல, கட்டுநாயக்க, மினுவங்கொடை, வெயங்கொடை, நிட்டம்புவ, கண்டி வீதி, கடவத்தை, பேலியகொடை, காலி முகத்திடல் வரையில் ஆண்களுக்கான ஸ்டேண்டட் சைக்கிளோட்ட போட்டிகள் இடம்பெறவுள்ளது.

பெண்களுக்கான சைக்கிளோட்ட போட்டி காலி முகத்திடலில் ஆரம்பமாகி காலிவீதியூடாக, பாமன்கடை, பிலியந்தலை, கெஸ்பேவ, கொட்டாவ, மஹரகம, நுகேகொட, தும்முள்ளைச் சந்தி, பித்தலைச் சந்தி, லேக் ஹவுஸ் வழியாக காலி முகத்திடல் வரையில் இடம் பெறவுள்ளது.

1973 வருடத்திற்கு பின்னரும் 2004 ஆம் ஆண்டிற்கு முன்னரும் பிறந்த இலங்கை சைக்கிளோட்ட (ஆண்/ பெண்) வீர வீராங்கனைகள் இப் போட்டியில் பங்குபற்றலாம்.

ஸ்டேண்டட் சைக்கிளின் முன்பக்க மற்றும் பின் பக்க பரப்பு 48 மற்றும் 18 ஆகவும், கைப்பிடி ரெஸ்ட் பார்/ஹெக் பார் கொண்டதாக காணப்படல் வேண்டும்.

குறித்த விண்ணப் படிவங்களை பூர்த்தி செய்து போட்டியிடுவதற்கு தகுந்த உடல் ஆரோக்கியத்தை உறுதிசெய்யும் வைத்தியரின் உறுதிப்படுத்தலுடன் ஏற்பாட்டு குழுவிற்கு wasathsiriya2023race@gmail.com எனும் மின்னஞ்சல் ஊடாகவோ அல்லது 0788429688 எனும் Whatsapp உடாகவோ அனுப்பிவைக்க வேண்டும்.

2023 ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கபெறும் விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதுடன், ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு Whatsapp ஊடாக அறிவிக்கப்படும். விண்ணப்பித்தல் மற்றும் பதிவுகளுக்கான கட்டணம் அறவிடப்படமாட்டாது.

ஸ்டேண்டட் சைக்கிளோட்ட போட்டிகள் (ஆண்கள்) முதலாமிடம் 100,000 ரூபாயும், இரண்டாம் இடத்திற்கு 75,000 ரூபாயும், மூன்றாமிடத்திற்கு 50,000 ரூபாயும், நான்காம் இடத்திற்கு 30,000 ரூபாயும் ஐந்தாம் இடத்திற்கு 20,000 ரூபாயும் 6 -10 வரையான இடங்களுக்கு 9,000 ரூபாய் வீதமும் 11-15 ஆம் இடங்களுக்கு 5,000 வீதமும் வழங்கப்படவுள்ளது.

மகளிருக்கான போட்டியில் முதலாமிடம் பெறுபவருக்கு 50,000 ரூபாயும், இரண்டாம் இடத்திற்கு 40,000 ரூபாவும், மூன்றாமிடத்திற்கு 30,000 ரூபாவும், நான்காம் இடத்திற்கு 20,000 ரூபாவும் ஐந்தாம் இடத்திற்கு 15,000 ரூபாவும் 6 - 10 வரையான இடங்களுக்கு 9,000 ரூபாய் வீதமும் வழங்கப்படவுள்ளது.

### கயிறு இழுத்தல்

கயிறு இழுத்தல் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் போட்டி நடத்தப்படுவதற்கு இரு தினங்களுக்கு முன்பாக கிடைக்கபெறல் வேண்டும். அதுதொடர்பில் 0717880695 எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

ஒரு குழுவில் 8 போட்டியாளர்கள் இணைந்துகொள்ள முடியும் என்பதோடு, மேலதிக வீரர்கள் இருவருவருடன் மொத்தமாக 10 பேர் பங்கு பற்ற முடியும்.

ஜனாதிபதி செயலகத்தினால் அனைத்து அரச நிறுவனங்களையும் இணைத்துகொண்டு நடத்தப்படவுள்ள “வசத் சிரிய” தமிழ் சிங்கள புத்தாண்டு நிகழ்வுகள் 22 ஆம் திகதி காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரையில் கொழும்பு சங்கரில்லா கீரீன் திடலில் நடைபெறவுள்ளதோடு, அரச துறையினர், திறந்த பிரிவுகள், விருந்தினர் பிரிவு என்ற 03 பிரிவுகளின் கீழ் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இசை நிகழ்ச்சி இரவு 7.00 மணிக்கு அதே இடத்தில் ஆரம்பமாகும்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.04.2023இல் வெளியிடப்பெற்றது.

இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 05 செவ்வாய்க்கிழமை 18.04.2023 கதிர் 32

## சாதாரண தர பரீட்சை மே 29 தொடங்கும்

2022க.பொ.த.சாதாரண தர பரீட்சைகளை 2023 மே 29 முதல் ஜூன் 08 வரை நடத்த திட்டமிட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மே 15 தொடங்கப்படவிருந்த 2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைகளை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்கத் தீர்மானித்துள்ளதாக, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர ஏற்கனவே அறிவித்திருந்தார்..

அதன்படி அறிவிக்கப்பட்டுள்ள புதிய திகதியில் மாற்றங்கள் இடம்பெறுவதற்கு வாய்பில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# எதிர்ப்பாளர்களை வேட்டையாடவே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

## சன்ன ஜயசுமன எம்.பி. எச்சரிக்கை



அரச எதிர்ப்பாளர்களுக்குப் 'பயங்கரவாதிகள்'முத்திரையைக்குத்தி அவர்களைவேட்டையாடுவதற்காகவே 'புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்' கொண்டுவரப்படுகின்றது. இந்தச் சட்டமானது ஜனநாயகத்துக் குப் பெரும் அச்சுறுத்தலாகும்.

இவ்வாறு டலஸ் அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மேற்படி சட்டமூலத்தை ஆராய்ந்த பின்னர்,ஒருவிடயம்தெளிவாகின்றது. அதாவது இது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் அல்ல. மாறாக அரசை எதிர்ப் பவர்களை ஒடுக்கு-வதற்காகக் கொண்டுவரப்பட்டுள்ள சட்டமூலமாகும்.

பயங்கரவாதிகளையும், அரச எதிர்ப்பாளர்களையும் ஒன்றாகக் காண்பித்து, அனைத்து அரச எதிர்ப்பாளர்களையும் ஒடுக்குவதற்கான திட்டமே இது.

ஜே.ஆர். ஜயவர்தன அன்று செய்ததையே இவர்கள் இன்று செய்கின்றனர். புதிய சட்டமூலத்தை எமது சுதந்திர மக்கள் சபை எதிர்க்கும்.

அதேவேளை, அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தினால் கூட கைது செய்யப்படலாம். தடுப்பு உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் இச்சட்ட மூலத்தின் பிரகாரம் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்படுகின்றது.

இது நகைப்புக்குரிய விடயமாகும்.

இச்சட்டமூலம் நிறைவேறினால் முழு நாடும், தொடர்ந்து அவசரகால சட்டத்தின்கீழ் இருப்பதுபோல்தான் இருக்கும் - என்றார். (02)

## எரிபொருள் கோட்டா அதிகரிப்பு மேலும் ஒரு வாரத்துக்கு நீடிப்பு



சித்திரைப் புத்தாண்டு காலத்துக்காக அதிகரிக்கப்பட்ட எரிபொருள் கோட்டா மேலும் ஒரு வாரத்திற்கு அமுலில் இருக்கும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் கோட்டா அதிகரிக்கப்பட்ட நாட்களில் பதிவான நுகர்வு உள்ளிட்ட தரவுகளை ஆராய்ந்ததன் பின்னரே அதிகரிக்கப்பட்ட எரிபொருள் கோட்டாவைத் தொடர்ந்தும் வழங்குவதா, இல்லையா என்பது தீர்மானிக்கப் படும் என கூட்டுத்தாபனத்தின் தலைவர் உவைஸ் மொஹமட் குறிப்பிட்டுள்ளார்.

கோட்டா திருத்தப்படும் நாள் குறித்து இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

ஏப்ரல் 4 நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருள் கோட்டாவை அதிகரிப்பதற்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

அதன்பிரகாரம், முச்சக்கர வண்டிக்கான 5 லீற்றர் எரிபொருள் கோட்டா, 8 லீற்றராக அதிகரிக்கப்பட்டது.

மோட்டார்சைக்கிளுக்கான கோட்டா 4 லீற்றர் முதல் 7 லீற்றர் வரை அதிகரிக்கப்பட்டது.

பஸ்ஸுக்கான எரிபொருள் கோட்டா 40 லீற்றர் முதல் 60 லீற்றராக அதிகரிக்கப்பட்டதுடன், காருக்கான எரிபொருள் கோட்டா 30 லீற்றராக அதிகரிக்கப்பட்டது.

வானுக்கான எரிபொருள் கோட்டா 20 லீற்றரிலிருந்து 30 லீற்றர் வரை அதிகரிக்கப்பட்டது. (02)

## சீன – இலங்கை அரசுகள் இடையில் குரங்குகள் பற்றி பேசப்படவில்லை

### அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல தெரிவிப்பு



குரங்குகளை இலங்கையிலிருந்து சீனாவுக்குக் கொண்டு செல்வது குறித்து அரசுகளுக்கு இடையில் பேச்சு நடக்கவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு இன்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

அங்கு அவர் தெரிவித்ததாவது:

ஒரு இலட்சம் குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அது தவறான தகவல்..

இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையில் அவ்விதமான பேச்சு முன்னெடுக்கப்படவில்லை. குறிப்பாக அரசுகளுக்கு இடையில் அவ்விதமான பேச்சு நடக்கவில்லை. அவ்வாறு பேச்சு நடத்தவும் முடியாது. திடீரென்று எந்தவொரு விலங்குகளையும் பிறிதொரு நாட்டுக்கு அனுப்பி வைக்க முடியாது.

அதேநேரம், சீனாவினுடைய தனியார் நிறுவனம் ஒன்றே குரங்குகளைப் பெற்றுக்கொள்வது பற்றி விவசாய அமைச்சருடன் பேச்சு நடத்தியது. அந்தப்பேச்சுக்களுக்கு அமைவாக, துறைசார் நிபுணர்களை நியமித்து அமைச்சர் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்.

குறித்த சீன நிறுவனத்துடனான பேச்சு தொடர்பாக அமைச்சர் அமரவீர அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார் – என்றார்.

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்த உயர் நீதிமன்ற பரிந்துரையை ஏற்போம்

### நீதி அமைச்சர் விஜேதாச அறிவிப்பு

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளுடன் முழுமையாக உடன்படுவதற்கு தயார் என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்ற சிறப்புச் செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது பயங்கரவாத செயற்பாடுகளுக்கு எதிராகப் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்படுகின்றது. ஆனால், வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது முதல், இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி அரகலயக்காரர்களை அடக்கு-வதற்கும், ஊடகங்களை , தொழிற்சங்கங்களை அடக்கு-வதற்கும் முயற்சிக்கப்படுவதாகப் பரப்பரை செய்கிறார்கள். தவறான பார்வை விதைக்கப்பட்டுள்ளது.


இந்தச் சட்டமூலத்தினை தயாரிக்கும் குழு நியமிக்கப்பட்ட 2015ஆம் ஆண்டில் யாரும் அரகலய பற்றிச் சிந்திக்கவில்லை. தொழிற்சங்கப் போராட்டங்கள் பற்றிக் கதைக்கவில்லை. எட்டுவருடங்களுக்கு முன்னர் தொடங்கப்பட்ட விடயத்தை இப்போது திரிவுபடுத்துவதற்கு முயல்கின்றார்கள்.

தற்போது ஏற்பட்டுள்ள வேடிக்கையான நிலைமை என்னவென்றால், பயங்கரவாதிளின் உரிமைகள் பற்றி பேசுபவர்களே அதிகமானவர்களாக உள்ளனர் என்பதுதான். பயங்கரவாதிகளால் பாதிக்கப்படுகின்ற 99 சதவீதமான அப்பாவி மக்களுக்காகப் பேசுபவர்கள் யாருமில்லை.

இந்த விதமான நிகழ்ச்சித் திட்டத்துக்குள் சில ஊடகங்களும் உள்ளன. ஆட்சியாளர்கள் என்ற வகையில் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகின்றது.

உயிருடன்இருக்கும்பொதுமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்காதுவிட்டு, உயிரிழந்தவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் எந்தப் பயனுமில்லை. ஆகவே நாம் இந்தச் சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றின் உத்தரவினை ஏற்றுக்கொள்வதற்கு தயாராகவுள்ளோம் – என்றார்.

## வாட்டி வதைக்கும் வெப்பம் எட்டு மாவட்டங்கள் கவனம்



நாட்டின் 8 மாவட்டங்களுக்கு வெப்பமான காலநிலை தொடர்பான எச்சரிக்கை அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம், குருநாகல், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட் டங்களில் கடும் வெப்பமான காலநிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

போதுமான அளவு நீர் பருகுமாறும் நிழலான இடங்களில் இளைப்பாறுமாறும் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.


முதியோர் மற்றும் நோயாளர்கள் இக்காலகட்டத்தில் அவதானமாக இருக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், கடினமான வேலைகளை மட்டுப்படுத்துமாறும், சிறு குழந்தைகளை வாகனங்களில் தனியாக விட்டுச்செல்ல வேண்டாம் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (02)

# பாழடைந்துபோன சோழர் கால ஆலயத்தை சீரமைக்க சித்தர்கள் குரல் அமைப்பு ஏற்பாடு

## கதிர்காமம், தஞ்சை நகரில் பரிதாபம்

(வி.ரி.சகாதேவராஜா)

சோழர் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டதாகக் கூறப்படும் பிள்ளையார் ஆலயம் ஒன்று பாழைந்து போய்க் கிடக்கும் நிலையில், அதனைச் சீரமைக்க சித்தர்கள் குரல் அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. கதிர்காமம் திஸ்ஸ பகுதியில் தஞ்சை நகரம் என்ற இடத்தில் இந்த ஆலயம் பாழடைந்த நிலையில் காணப்படுகின்றது. கூரை இடிந்து விழும் நிலையில் கிடக்கின்றது. மூலவிக்கிரகம் அகற்றப்பட்டு வெறும் பீடம் மட்டுமே காணப்படுகின்றது.





சித்தர்கள் குரல் அமைப்பினர் அதன் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையில் ஞாயிற்றுக்கிழமை அங்கு நேரில் சென்றனர். பேராதனை பல்கலைக்கழக தமிழ்த் துறை முது–நிலை விரிவுரையாளர் கலாநிதி செ. சுதர்சன் இவ்வாலயத்தின் பரிதாபரமான நிலையை அறிந்து திருமலையில் உள்ள பிரபல ஆசிரியர் பிரகாஷ் மூலமாக சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜிக்குத் தெரியப்படுத்தியிருந்தார். அங்கு சென்ற சித்தர்கள் குரல் அமைப்பினர் ஆலயத்தை பார்வையிட்டு, அதன் உரிமையாளர் விஸ்வநாதன், பராமரிப்பாளர் சிவகுமார் குடும்பத்தினருடன் கலந்துரையாடினர். ஆலயத்தைச் சீரமைத்துத் தருமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

அதனையடுத்து சித்தர்கள் அங்கு மடைவைத்து விடைகேட்டு இருமணிநேர சிறப்பு யாகம் நடத்தினர். சூழவுள்ள தமிழ் சிங்கள மக்களும் இந்த யாகத்தில் இணைந்து கொண்டனர். யாகத்தின் பின்னர் ஆலயத்தை புனரமைத்து உரிய–வர்களிடம் ஒப்படைக்க ஏற்பாடுகள் செய்யப்படுமென சிவசங்கர் ஜி அங்கு தெரிவித்தார். இந்த ஆலயம் குறித்து அதன் தலைவர் விஸ்வநாதன் தெரிவித்ததாவது:

கதிர்காமத்திலிருந்து அம்பாந்தோட்ட செல்லும் முதன்மை வீதியில் அமைந்த திஸ்சமஹாராமவில் அமைந்த புராதனமான சைவத் தமிழ்க் கிராமம் தஞ்சை நகரம் என்று தொன்றுதொட்டு அழைக்கப்பட்டு வருகிறது. மன்னராட்சிக் காலத்தில் பெருநகராக விளங்கிய இக்கிராமம் இன்றும் தஞ்சை நகரம் என்றே அழைக்கப்படுகிறது.

2☞

## பண்ணைச் சிலை வழக்கு ஒத்திவைப்பு

(ந.லோகதயாளன்)

யாழப்பாணம் பண்ணைப் பகுதியில் வைக்கப்பட்ட நாகபூசணி அம்மன் சிலையை அகற்றுமாறு நீதிமன்றம் இன்று உத்தரவு வழங்கவில்லை, மாறாக எழுத்து மூல சமர்ப்பணங்களை முன்வைக்குமாறு நிதிமன்றம் கோரியுள்ளது என்று ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பண்ணைச் சுற்றுவட்டப் பகுதியில் உள்ள நாகபூசணி அம்மன் சிலையை அகற்றக்கோரி பொலிஸாரினால் யாழ்ப்பாணம் நீதிமன்றில் தொடரப்பட்ட கோரிக்கை இன்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையையொட்டி நீதிமன்றச் சூழலில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டுப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. வழக்கு விசாரணை நிறைவடைந்த பின்னர் நீதிமன்றிற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற

2☞

## பல்கலை மாணவன் ரயிலில் மோதி சாவு!

கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர் ஒருவர் ரயில் விபத்தில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பம்பலப்பிட்டி ரயில் நிலையத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மருதானையிலிருந்து மொரட்டுவை நோக்கிப் பயணித்த ரயிலில் மோதியே அவர் உயிரிழந்துள்ளார்.

களுத்துறை வடக்கில் வசிக்கும் 24 வயதான பல்கலைக்கழக மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (02)

## பண்ணைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர், வழக்கு மே 4 அன்று மீண்டும் அழைக்கப்படும்போது எழுத்துமூல சமர்ப்பணங்களை முன்வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

சித்திரைப் புத்தாண்டு அதிகாலை பண்ணைச் சுற்றுவட்ட பகுதியில் நாக பூசணிஅம்மன்சிலைதிடீரனவைக்கப்பட்டது. அந்தச் சிலையினால் போக்குவரத்திற்கு இடையூறு எனவும், மதங்களுக்கு இடையில் முரண்பாடுகள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு எனவும் தெரிவித்து அந்தச் சிலையை அங்கிருந்து அகற்ற நீதிமன்றின் அனுமதியைப் பொலிசார் கோரியிருந்தனர்.

"இவ்வாறு அனுமதி கோருவவதற்கு பொலிசாருக்கு அதிகாரங்கள் இல்லை என்பதை நீதிமன்ற சமர்ப்பணத்தில் குறிப்பிட்டிருந்தோம். எழுத்துமூலசமர்ப்பணங்களிற்காக வழக்கு எதிர்வரும் 04.05.2023 அன்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்.

# உயிருக்குப் போராடும் யானைக்குச் சிகிச்சை





## பம்பைமடு கொள்ளை சந்தேநபர் ஒருவர் கைது

வவுனியாவில்கர்ப்பிணிப்பெண்ணையும் அவரது தாயாரையும் வீதியில் வாளால் வெட்டிவிட்டு நகை மற்றும் பணத்தைக் கொள்யடித்துச் சென்றவர்களில் ஒருவரைத் தாம் கைது செய்திருக்கிறார்கள் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தாண்டு தினத்தன்று இரவு 8.30 மணியளவில் பம்பைமடுப் பகுதியில் வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த கர்ப்பிணிப் பெண் மீதும் அவரது தயார் மீதும் உள்ளிட்ட இருவர் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்து கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பூவரசன்குளம் பொலிசார் இன்று (18.04) தெரிவித்தனர்.

புத்தாண்டு தினத்தன்று இரவு 8.30 மணியளவில் வவுனியாவில் இருந்து பூவரசன்குளம்நோக்கிச்மோட்டர்சைக்கிளில் சென்ற 8 மாத கர்ப்பிணிப் பெண் மற்றும் அவரது தாயார் மீது பம்மைமடுப் பகுதியில் வைத்து வாள்வெட்டு நடத்தப்பட்டது. தாக்கப்பபட்டபோது அந்தப் பெண் 8 மாதக் கர்ப்பிணியாக இருந்தார். அவர்கள் இருவரும் அணிந்திருந்தா ஆறரைப் பவுண் நகைகள் மற்றும் ஒன்றரை லட்சம் ரூபாய் பணம் என்பவற்றையும் தாக்குதல் நடத்தியவர்கள்கொள்ளையடித்துச்சென்றிருந்தனர். காயமடைந்த இருவரும் வவுனியா வைத்தியசாலையில்சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பூவரசன்குளம் பொலிசார் 30 வயதுடைய இளைஞர் ஒருவரை கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின் சந்தேகநரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர். (100)



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்ப்பட்ட மணவாளன்பட்டமுறிப்பு கோணக்குளம் பகுதியில் உயிருக்குப் போராடி வரும் யானைக்கு வன உயிரிகள் திணைக்களத்தினர் சிகிச்சை வழங்கினர்.

கடந்தசிலவாரங்களாககுறித்தயானை அப்பகுதிகளில் நடமாடி வருவதாகவும் , யானையின் கால் பகுதியில் காயங்கள் இருப்பதற்கான தடயங்கள் இருப்பதாகவும் , அந்த பகுதியின் குளக்கரை நீர் பகுதியில் குறித்த யானை படுத்திருப்பதாகவும் தெரிவித்த பொதுமக்கள் தகவல் வழங்கி யதை அடுத்து அந்த யானைக்குச் சிகிச்சை தொடங்கப்பட்டுள்ளது.

இந்தயானைதொடர்பில் ஒட்டுசுட்டான் வனஉயிரிகள் திணைக்களத்திற்கு பல தடவைகள் அறிவித்தல் கொடுத்தும்அவர்கள்வரவில்லை என்றும் யானையைப் பாதுகாக்க அவர்கள் தவறிவிட்டார்கள் என்றும் மக்கள்குற்றஞ்சாட்டுகின்றனர்.

திங்கட்கிழமை மாலையே அந்த இடத்திற்கு வந்து சேர்ந்த வன உயிரிகள் திணைக்களத்தினர் யானைக்கான சிகிச்சையைத் தொடங்கினர். அதற்கு உணவு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் இதுதொடர்பில் தெரிவிக்கையில், வடமாகாணம்முழுவதுக்குமாக ஒரு வைத்தியரே தம்மிடம் இருக்கிறார் என்றும் அதனாலேயே உடனடியாக யானையைக் கவனிக்க முடியாத நிலை இருந்தது எனவும் தெரிவித்தனர்.

## பாழடைந்துபோன...




















தஞ்சை நகரத்தில், முதன்மை வீதியை மிக அண்மித்து, பிரதான வீதியை நோக்கியவாறு அமைந்திருப்பதுதான், யாத்திரிகர்களுக்கும் தன்னை நாடுவோருக்கும் ஞானம் வழங்கும் குளவிப் பிள்ளையார் ஆலயம். கதிர்காம யாத்திரிகர்கள் இந்த ஆலயத்தைக் கடந்து செல்லும்போது இப்பிள்ளையாரின் அனுமதியைப் பெற்றே செல்ல வேண்டும் என்ற மரபு காலங்காலமாகப் போற்றப்பட்டு வருகிறது. யாத்திரைக்குத் தகுதி அற்றவர்களைப் பிள்ளையார் குளவி வடிவில் தண்டிப்பார் என்றும் அதனாலேயே குளவிப் பிள்ளையார் என்ற பெயர் புராதன காலத்திலிருந்து வழங்கப்பெற்று வருகிறது என்றும் கூறப்படுகிறது. தொடக்கத்தில் சித்தர்களாலும் ஞானிகளாலும் பூசிக்கப்பெற்ற புனிதம் மிக்க அலயம் இது. ஆங்கிலேயர்களின் காலத்தில் பிரிட்டிஷ் ராணிக்கு உரியதாகியது. இவ்வாலயத்தின் அருளைப்பெற்றுஉயர்ந்தமகான்மதனகுரு சாமி என்பவர் 1903 இல் ராணியிடமிருந்து கோயிலையும் நிலத்தையும் பெரும் முயற்சி செய்து பெற்றார்.

இந்தியாவிலிருந்து ஐந்தரை அடி உயரமான அழகிய ஒரு பிள்ளையார் சிலையைக் கொண்டு வந்து 1929இல் அதைத் வைத்து அழகிய கட்டடக்கலையுடன் கூடிய ஆலயமாக்கினார்.

மதனகுரு சாமியின் மறைவுக்குப் பின்னர் அவரது மனைவியும் முருக பக்தையுமான பழநி அம்மா இந்த ஆலயத்தைப் பேணிவந்தார். நாட்டில் 1983 இல் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் இக்கோயில்பாதிப்புக்குள்ளாகிஅழிவடையும் நிலைக்குச் சென்றது.

கிராமோதயம் 87 கொண்டாட்டங்களை முன்னெடுத்த அப்போதைய பிரதமர் ஆர். பிரேமதாசாவின்பணிப்புரையின்பேரில்சீரமைக்கப்பட்ட இந்தஆலயம் 23.06.1987 மீளவும் திறக்கப்பட்டது.

நாட்டில் இறுதிப் போர் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, 2007 இல் இந்த ஆலயம் மீளவும் பாதிப்புக்குள்ளானது. இங்கிருந்த ஐந்தரை அடி உயரமான மூலமூர்த்தி காணாமற்போய்விட்டது.

தடயமற்று அழியும் தறுவாயில் உள்ள இந்த ஆலயத்தில் கடையில் வாங்கிய ஒரு சிறிய பிள்ளையாரை வைத்து இப்போது வழிபடுகின்றனர்.

மதனகுருவின் பெறாமகனாகிய கந்தையா விஸ்வநாதன் ஆகிய நானும் மனைவியும் இந்த

ஆலயத்தைப்பராமரித்துவருகின்றோம்.

இந்த ஆலயத்தைச் சூழவும் சுமார் 50 சைவத் தமிழ்க் குடும்பங்கள் வாழ்கின்றன. சிங்கள மக்களும் இந்த ஆலயத்திற்கு வந்து செல்கின்றனர்.

சூழ உள்ள சைவத்தமிழ்க் குடும்பங்கள் வறிய நிலையில் உள்ளன. ஆனால் எல்லோருக்கும் ஆலயத்தைத் திருத்தி அமைக்கவேண்டும் என்ற பெருவிருப்பு உள்ளது.

இந்த ஆலயம் திருத்தி மீளமைக்கப்பெற்றால் அவ்வாலயச் சூழலில் உள்ள சைவத் தமிழர்களுக்கும் பாத யாத்திரிகருக்கும் சிங்கள பக்தர்களுக்கும் பெரும் துணையாக இருக்கும்.

இந்த சுற்றுச்சூழலிலே தமிழ் மக்களும் சிங்கள மக்களும் வாழ்ந்து வருகின்றார்கள்.

ஆரம்பத்தில் தஞ்சை நகரம் என்றிருந்த இந்த பிரதேசம் இன்று சுதுகம் பல என அழைக்கப்படுகின்றது – என்றார். மிக விரைவில் ஆலயத்தை புனரமைத்து மக்கள் வழிபாட்டிற்காக திறந்துவைப்பதாக சங்கர் ஜி அங்கு உறுதியளித்தார்.

# தேர்தலுக்காகப் போராட்டம் நடத்துபவர்கள் வினாத்தாள்களை திருத்த போராடுவதில்லை

## பிரசன்ன ரணதுங்க சாடல்



நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியைக் குறுக்கு வழிகளைக் கடைப்பிடித்து கோஷங் களிலும் வாக்குறுதிகளிலும் மாட்டிக்கொள்வதன் மூலம் தீர்க்கமுடியாது என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எனவே, வலிநிவாரணிகள் நோயாளியைத் தற்காலிகமாக குணப்படுத்தும் அதேவேளை, அடிப்படை நோய்க்கு சிகிச்சையளிப்பதும் அவசியமானது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பிரான்ஸில் இலங்கையர்கள் குழுவொன்று ஏற்பாடு செய்திருந்த சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் பின்வருமாறு கூறினார்.

சில அரசியல் கட்சிகள் ஜனரஞ்சக கருத்துகளைத் தெரிவிக்கின்றன. அவை மிகவும் கவர்ச்சிகரமானவை. எல்லோரும் கேட்க விரும்புகிறார்கள்.

ஆனால், அந்த யோசனைகளையும் பரிந்துரைகளையும் இந்தத் தளத்தில் செயற்படுத்த முயன்றால் சிக்கல்கள் ஏற்படும். எனவே, இந்தத் தருணத்தில் நாம் செய்ய வேண்டியது, கோங்களிலும், வாக்குறுதிகளிலும் சிக்கிக் கொள்ளாமல், அடுத்த தேர்தலுக்காக உழைக்க வேண்டும்.

உடைந்த பொருளாதாரத்தை வாக்களிக்கும் முன் சரிசெய்ய வேண்டும். தேர்தலுக்கு நாங்கள் பயப்படவில்லை. ஆனால், அதற்கு முன், மக்கள் பெறும் சம்பளத்தில் மூன்று வேளை சாப்பிடும் பொருளாதாரத்தை உருவாக்கி, தேர்தலுக்கு செல்வோம். எந்த முடிவையும் ஏற்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

நீங்கள் தேர்தலுக்காக காத்திருந்து, உங்கள் அமைச்சுக்களை அரவணைத்து அரசியல் செய்தால், இந்த நாடு காணாமல் போய்விடும்.

இதைப் புரிந்து கொண்டு, நாட்டின் மீது அக்கறை கொண்ட, படித்த, புத்திசாலித்தனமான எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அரசின் திட்டத்துக்கு பல்வேறு வகையில் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

ஐ.எம்.எவ்., இந்தியா, சீனா மற்றும் பிற நாடுகள் இன்று நமக்கு உதவுகின்றன. ஆனால், நம் நாட்டில் சில அரசியல் கட்சிகள் பொய்களை கூறி மக்களிடையே வெறுப்பையும் கோபத்தையும் பரப்பி வருகின்றன. தங்களுக்கு வாக்களிக்கும் மக்களுக்கு சலுகைகளை விரும்பாதவர்கள் ஆட்சிக்கு வந்து நாட்டைக் கட்டியெழுப்புவார்கள் என்று கனவிலும் நினைக்க வேண்டாம்.

தற்போதைய ஜனாதிபதி நெருக்கடிகளை ஒவ்வொன்றாக தீர்த்துக்கொண்டு மிகவும் வெற்றிகரமான பயணத்தை மேற்கொண்டு வருகிறார்.

அவருக்கு எதிராக அரசியல் செய்த நாம் இன்று அவருடன் கைகோர்த்து புரிந்துணர்வுடன் செயற்படுகின்றோம். ஒரு நாட்டை கட்டியெழுப்ப இந்த புரிதல் தேவை.

சமீபகாலமாக, நாட்டின் கட்டுமானம் மற்றும் சுற்றுலாத் துறை சரிந்து உள்ளது. இப்போது அவை கொஞ்சம் கொஞ்சமாக புத்துயிர் பெற்று வருகின்றன. எனது அமைச்சும் நாட்டுக்கான டொலர்களைக் கண்டுபிடிக்கும் புதிய திட்டத்தைத் தொடங்கியது.

வெளிநாட்டில் இருந்து கொண்டு நீங்கள் டொலர்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொள்ளலாம். நாங்கள் ஏற்கனவே ஏராளமான வீடுகளை டொலர்களுக்கு விற்றுவிட்டோம்.

அந்த பணம் எனக்கானது அல்ல, நாட்டின் பொருளாதாரத்திற்கானது. பொருளாதாரம் வளர்ந்தால் மக்களுக்கு நிம்மதி கிடைக்கும் என்று அர்த்தம்.

எனவே, வெளிநாடுகளில் உள்ள கபட அரசியல் கட்சிகளின் பொய்யான கோங்களுக்கு நீங்கள் ஏமாற வேண்டாம். இதை கலைத்துவிட்டதாக இலங்கையில் நய-வஞ்சகர்கள் போராட்டம் நடத்தும் போது, இதே பாதையில் சென்று வெளிநாடுகளிலும் போராட்டம் நடத்தாதீர்கள்.

உயர்தர மாணவர்களின் வினாத்தாள்கள் இன்னும் சரிபார்க்கப்படவில்லை. அதனால், வழக்கமான தேர்வை குறித்த நேரத்தில் நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தேர்தலைக் கோரி வீதிக்கு வருபவர்கள் பிள்ளைகளின் வினாத்தாளைப் பார்க்க வேண்டும் என்று கோரி யாரும் கிளர்ச்சி செய்யவில்லை.

எனவே ஏமாறாதீர்கள். இலங்கையில் உள்ள உங்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் உண்மை நிலவரம் பற்றி கேளுங்கள். இலங்கையில் ஒரு வருடத்திற்கு முன்பு இருந்த நிலை இல்லை.

வரிசையில் நிற்கும் காலம் முடிந்துவிட்டது. மின்சாரம் துண்டிக்கப்படாது.

எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டது. அடுத்த சில மாதங்களில் மின்கட்டணத்திலும் ஓரளவு நிவாரணம் கிடைக்கும் என்று நம்புகிறேன். அடுத்த ஒன்றரை வருடங்கள் மக்களுக்கு இன்னும் சிறப்பாக அமையும் என்றும் அவர் கூறினார் – என்றார்.

# மஹிந்தவிடம் ஆசிபெற்ற பிரபல முக்கியஸ்தர்கள்
















தமிழ்,சிங்கள புத்தாண்டு சோபகிருது என்ற பெயருடன் கடந்த வெள்ளிக்கிழமை பிறந்திருந்தது.

இந்த வருட பிறப்பை உலக வாழ் தமிழ், சிங்கள மக்கள் பல பாகங்களிலிருந்தும் கொண்டாடியிருந்தனர்.

அந்த வகையில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தினருடன் சித்திரை புத்தாண்டை கொண்டாடிய புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டிருந்தன.

இந்நிலையில் புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு அரசியல்வாதிகள், வர்த்தகர்கள், அரச அதிகாரிகள் என ஏராளமானோர் மஹிந்தவின் வீட்டுக்குச் சென்று ஆசீர்வாதம் பெற்று சென்றுள்ள புகைப் படங்கள் தற்போது வெளியாகியுள்ளன.

# ஜனநாயக ரீதியான போராட்டம்கூட பயங்கரவாதமாக சித்திரிக்கப்படும்

## அஜித் மானப்பெரும கருத்து



உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்ட–மூலம் தொடர்பாக சிவில் தரப்பினருடன் விரிவான பேச்சில் ஈடுபடுவோம். வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள சட்டமூலம் திருத்தங்களின்றி நிறைவேற்றப்பட்டால் ஜனநாயக போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கூட பயங்கரவாதிகளாக சித்திரிக்கப்படுவார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தெரிவித்துள்ளார்.

கம்பஹா பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ள அவர் மேலும் பேசுகையில் –

நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கடுமையான விமர்சனங்கள் காணப்படுகின்ற பின்னணியில் பாரதூரமான ஏற்பாடுகளை உள்ளடக்கிய வகையில், உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் குறிப்பிடுகின்றமை அடிப்படையற்றது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு மக்களாணை கிடையாது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளை செயற்படுத்தும் போது சமூகக் கட்டமைப்பில் அமைதியின்மை நிலவும். மக்கள் போராட்டம், எதிர்ப்பு ஆகியவற்றில் இருந்து அரசாங்கத்தை பாதுகாப்பதற்காகவே உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூல வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

சட்டமூல வரைவில் ஜனநாயகத்துக்கு எதிராக உள்வாங்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பல தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டதை தொடர்ந்து சட்டமூலத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கும் தீர்மானத்தை நீதியமைச்சர் தாமதப்படுத்தியுள்ளார்.

இந்த சட்டமூலம் தொடர்பில் சிவில் தரப்பினருடன் விரிவான பேச்சில் ஈடுபடுவோம்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் திருத்தங்கள் இல்லாமல் நிறைவேற்றப்பட்டால் ஜனநாயக போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கூட பயங்கரவாதிகளாக சித்திரிக்கப்படுவார்கள். எனவே, ஜனநாயகத்தைப் பாதுகாக்க நீதிமன்றத்தை நிச்சயம் நாடுவோம். – என்றார்.

# இலங்கை – ஐக்கிய இராச்சிய மூலோபாய உரையாடல் இன்று!

## அருணி விஜேவர்தன தகவல்



லண்டனில் உள்ள வெளிவிவகார பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தில் வெளிவிவகார செயலாளர் மட்டத்தில் இன்று (செவ்வாய்கிழமை) ஆரம்பமாகவுள்ள ஐக்கிய இராச்சிய - இலங்கை மூலோபாய உரைய-ாடலில் வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தன பங்கேற்கவுள்ளார்.

வெளிவிவகார பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் ஐக்கிய இராச்சிய வெளியுறவு அமைச்சர் அன்னே மேரி ட்ரெவெல்யன் அங்குரார்ப்பணம் செய்துவைக்கவுள்ள இந்த உரையாடல், வெளிவிவகார பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் நிரந்தர துணைச் செயலாளர் சேர் பிலிப் பார்டனின் பங்கேற்புடன் இடம்பெறவுள்ளது.

இந்த ஆண்டு இலங்கைக்கும் ஐக்கிய இராச்சியத்துக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 75 ஆவது ஆண்டு நிறைவு கொண்டாடப்படவுள்ள முக்கிய தருணத்தில், வெளிவிவகார பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் அழைப்பின் பேரில் ஆரம்ப மூலோபாய உரையாடல் கூட்டப்பட்டுள்ளது.

இருநாடுகளுக்கும் இடையிலான பன்முக உறவுகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கானதொரு மன்றத்தை மூலோபாய உரையாடல் இரு தரப்புக்கும் வழங்கும்.

உரையாடலின் பக்க அம்சமாக, வெளிவிவகார செயலாளர் விஜேவர்தன, பொதுநலவாய அமைப்பின் உதவிச் செயலாளர் நாயகம் பேராசிரியர் லூயிஸ் ஜி. பிரான்ஸ்ஸுடன் இருதரப்பு சந்திப்பில் ஈடுபடவுள்ளதுடன், சர்வ கட்சி நாடாளுமன்றக்குழு உறுப்பினர்களுடனும் கலந்துரையாடுவார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நீதிமன்றப் பரிந்துரைகளைத் தாண்டிய நோக்கும் ஆட்சியாளர்களுக்கு அவசியம்

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் நீதிமன்றின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச. நீதிமன்றம் இந்தச் சட்டம் அரசமைப்புக்கு முரணானதாக அமைந்துள்ளதா என்பதையே கவனத்தில்கொள்ளும். அதைத் தவிர்த்து சட்டம் எதிர்காலத்தில் எவ்வாறு தவறானவர்களால் முறைகேடாகப் பயன்படுத்தப்படலாம் என்பதில் அக்கறை செலுத்ததாது. என்பதால் நீதிமன்றத்தின் பரிந்துரைகளுக்கு அப்பால் எதிர்க் கட்சிகளினதும் பொது அமைப்புக்களினதும் கருத்துக்களும்கூடக் கவனத்தில் எடுக்கப்படுவது அவசியம், முக்கியம்.

“பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது பயங்கரவாத செயற்பாடுகளுக்கு எதிராகப் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்படுகின்றது. ஆனால், வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது முதல், இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி அரகலயக்காரர்களை அடக்குவதற்கும், ஊடகங்களை , தொழிற்சங்கங்களை அடக்குவதற்கும் முயற்சிக்கப்படுவதாகப் பரப்பரை செய்கிறார்கள். தவறான பார்வை விதைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலத்தினை தயாரிக்கும் குழு நியமிக்கப்பட்ட 2015ஆம் ஆண்டில் யாரும் அரகலய பற்றிச் சிந்திக்கவில்லை. தொழிற்சங்கப் போராட்டங்கள் பற்றிக் கதைக்கவில்லை. எட்டுவருடங்களுக்கு முன்னர் தொடங்கப்பட்ட விடயத்தை இப்போது திரிவுபடுத்துவதற்கு முயல்கின்றார்கள்.

தற்போது ஏற்பட்டுள்ள வேடிக்கையான நிலைமை என்னவென்றால், பயங்கரவாதிளின் உரிமைகள் பற்றி பேசுபவர்களே அதிகமானவர்களாக உள்ளனர் என்பதுதான். பயங்கரவாதிகளால் பாதிக்கப்படுகின்ற 99 சதவீதமான அப்பாவி மக்களுக்காகப் பேசுபவர்கள் யாருமில்லை. ஆட்சியாளர்கள் என்ற வகையில் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகின்றது.

உயிருடன் இருக்கும் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்காதுவிட்டு, உயிரிழந்தவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் எந்தப் பயனுமில்லை. ஆகவே நாம் இந்தச் சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றின் உத்தரவினை ஏற்றுக்கொள்வதற்கு தயாராகவுள்ளோம்” என்று நீதி அமைசச்சர் இன்றைய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்திருக்கிறார்.

பயங்கரவாதச் சட்டம் போன்ற சட்டங்களில் உள்ள பிரச்சினை அவை அரசமைப்புக்கு முரணமாக இருக்கின்றனவா என்பதில் மட்டுமல்ல, அதற்கு அப்பால் அது எப்படிப் பயன்படுத்தப்படுகின்றது என்பதிலும் தங்கியுள்ளது. கடந்த காலங்களில் தமிழ் இனத்திற்கு எதிராக அந்தச் சட்டம் மிகத் தீவிரமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. சட்டம் ஒழுங்குப் படையினருக்கு அளவுக்கு மீறிய அதிகாரத்தைக் கொடுத்த அந்தச் சட்டம், தமிழ் மக்களின் நாளாந்த வாழ்க்கையை பெரும் துன்பதுயரங்களுக்கு உள்ளாக்கியிருக்கின்றது.

பலர் விசாரணைகள் இன்றி மிக நீண்ட காலமாகச் சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் செய்தார்கள் என்று சொல்லப்பட்ட குற்றங்களுக்கு விதிக்கப்படக்கூடிய தண்டனைக்குமேற்பட்ட காலம் அவர்கள் விசாரணையே இன்றிச் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்திருக்கிறார்கள். பலர் அவர்களிடமிருந்து பலவந்தமாகப் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் கொண்டு உச்சபட்சத் தண்டனைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்திலும் நிகழாது என்பதை நீதி அமைச்சரால் உறுதிப்படுத்த முடியாது. குற்றவாளிகள்தப்பித்தாலும்கூடப்பரவாயில்லைஒருநிரபராதி கூடத் தப்பிக்கக்கூடாது என்பது நீதித் துறையில் புகழ்பெற்ற வாக்கியம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் ஒன்றல்ல பல நிரபராதிகள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் ஒட்டுமொத்த வாழ்க்கையும் பாழடிக்கப்பட்டிருக்கின்றது. எனவேதான் இத்தகைய சட்டங்களை வேண்டாம் என்கிறோம்.

இவை மனித வதைச் சட்டங்கள். நாகரிகமான, நல்லிணக்கமான சமூகத்திற்கு ஏற்புடையவை அல்ல. அதனால் நீதிமன்றப் பரிந்துரைகளைத் தாண்டி இத்தகைய சட்டங்களின் சமூகப் பெறுமானங்களும் கவனத்தில் எடுக்கப்படுவது அவசியம்.

# மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு மக்கள் பிரதேச சபைக்கு எதிராகப் போராட்டம்













(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டம் புதுக்குடியிருப்பில் விலங்குக் கழிவுகள் கொட்டப்படுவதை எதிர்த்து மக்கள் திங்கள்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு அமலபுரம் 50 வீட்டுத்திட்ட பகுதியில் இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளின் கழிவுகளை இப்பகுதியில் உள்ள திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் பிரதேச சபையின் கழிவகற்றல் தரப்பினர் கொட்டி வருகின்றனர்.

இதனால் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும், உரிய தரப்பினரிடம் தெரிவித்தும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இதையடுத்தே தமது எதிர்ப்பைப் பதிவு செய்ய அவர்கள் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்பகுதியில் இறைச்சிக் கழிவுகளை சில சமயங்களில் குழிகளை வெட்டியும் சில கழிவுகளை வெளியிலும் போட்டு வருகின்றனர் என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இதனால் அந்தப் பகுதி எங்கும் துர்நாற்றம் வீசுகின்றது, சுவாச நோய்கள் ஏற்படுகின்றன, நிலத்தடி நீர் பாதிக்கப்படுகின்றது, தோல் நோய்கள் ஏற்படுகின்றன, சுத்தமான குடிதண்ணீர் கிடைக்காமல் போகின்றது என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பிரச்சினைளகளை அடுக்குகின்றனர்.

மழை காலங்களில் திண்மக் கழிவுப் பகுதியில் இருந்து வெள்ளநீர் குடியிருப்பு பகுதிகளுக்குள் பரவி வரும்போது மேலும் பல சுகாதாரப் பிரச்சனைகளுக்குத் தாம் முகம்கொடுக்கின்றனர் என்றும் மக்கள் தெரிவித்தனர். அத்தகைய காலங்களில் தங்கள் உறவினர்கள்கூட இப்பகுதிக்கு வருவதில்லை எனவும் இங்குள்ளவர்களுக்கு தோல் நோய் பிரச்சனைகள் உள்ளதால் உறவினர்கள் தங்களை ஒதுக்குகின்றனர் என்றும் அவர் மேலும் குறைப்பட்டனர்.

இறைச்சிக் கழிவுகள் கொட்டப்படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

இப்பகுதியில் 14 வருடங்களுக்கு முன்னர் தாம் குடியேறியபோது இங்கு சேதன உரம் தயாரிப்பதற்கான நிலையம் அமைக்கவுள்ளதாகவும் அதில் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும் எனவும் அரசதிணைக்களத்தினால் வாக்குறுதியளிக்கப்பட்டே இந்த நிலையம் தொடங்கப்பட்டது என்று மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். ஆனால் இதுவரை அவ்வாறு எதுவித வேலைவாய்ப்பும் தமக்கு வழங்கப்படவில்லை எனவும் ஆபத்தான கழிவுகளை மட்டும் சுகாதாரமற்ற முறையில் கொட்டி வருவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

பல தடவைகள் அரசியல்வாதிகள், திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸாருக்கு இதுதொடர்பில் முறையிட்டபோது, இனிமேல் இவ்வாறு நடக்காது என உரிய அதிகாரிகள் தெரிவித்தாலும்கூட இதுவரை எதுவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச சபை செயலாளரிடம் வினவியபோது அவர் தெரிவித்ததாவது:

ஆரையம்பதி பிரதேச சபைக்குரிய திண்மக்கழிவு நிலையம் முறையாகச் செயல்பட்டு வருகின்றது. அங்கே குப்பை தரம் பிரித்து சேதன உரம் தயாரித்துக்கொண்டிருக்கின்றோம்.

இருந்தும் சில பிரச்சினைகள் அங்கு ஏற்பட்ட காரணத்தினால் இப்போது அதை மெதுவாகச் சீர்செய்து வருகின்றோம். எதிர்காலத்தில் எதுவித சுகாதாரப் பிரச்சினைகளும் மக்களுக்கு ஏற்படாத வண்ணம் அதனைச் சீர் செய்வோம்.

அங்கு தற்போது மடுவத்தின் கழிவுகள் எதுவும் கொட்டப்படுவதில்லை. இந்தக் கழிவுகளை நிரந்தரமாக அப்பகுதியில் கொட்டாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# 453.06 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மார்ச்சில் மத்திய வங்கியால் கொள்வனவு

இலங்கை மத்திய வங்கி கடந்த மார்ச் மாதம் 453.06 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கொள்வனவு செய்துள்ளது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செலாவணி சந்தையில் இவ்வாறு டொலர்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஜனவரி மாதம் 348.79 மில்லியன் டொலர்களையும், பெப்ரவரி மாதம் 287 டொலர்களையும் மத்திய வங்கி கொள்வனவு செய்துள்ளது.

ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மத்திய வங்கி மொத்தமாக 1088.85 மில்லியன் டொலர்களை கொள்வனவு செய்துள்ளது.

அத்துடன், இந்தக் காலப் பகுதியில் 226.17 மில்லியன் டொலர்களை விற்பனை செய்துள்ளது.

மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள புதிய அறிக்கையில் இந்த விடயங் கள் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.